ஒன்பது குட்டி நாடகங்கள்

நாடகப் பேராசிரியர்

ப. சம்பந்த முதலியார், பி. ஏ. பி. எல்

அவர்களால் இயற்றப்பட்டது

இவர் எழுதிய மற்ற நூல்கள்

லீலாவதி - சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள். நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம் இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம். தாசிப்பெண், மெய்க்காதல், பொன்விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி—சுலோசனா, புஷ்பவல்லி, உத்தம பத்தினி, அமலாதித்யன், கள்வர் தலைவன். சபாபதி முதற்பாகம். பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்ரார்ஜுனா, கொடையாளி கர்ணன். சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து. மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், முற்பகல் செய்யின் பிற்பகல், விளையும் நாடகமேடை நினைவுகள் - ஆறுபாகங்கள், நாடகத்தமிழ், யயாதி, பிராமணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரச குமாரன், சந்தையிற் கூட்டம். வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக் கலையில் தேர்ச்சி பெறுவ தெப்படி? ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காக்ஷி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுர நாடக சபை சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீந்தார் சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலும்--ஐந்துபாகங்கள், சிவாலய சிற்பங்கள், சதி சக்தி, மனை ஆட்சி, இந்தியனும் ஹிட்லரும், தீபாவளி வரிசை, காலக் குறிப்புகள். சுப்ரமண்ய ஆலயம், தீயின் சிறு திவலை, கலையோ காதலோ, உணவுப் பொருள்கள் சபாபதி துவிபாஷி, சபாபதி துணுக்குகள், இல்லறமும் துறவறமும்.

கிடைக்குமிடம் :

P, **சம்பந்த முதலியார் B.A., B.L.,** இலவம்

13 **ஆச்சாரப்பன் தெரு, சென்னை—1.**

காபி ரைட்) 1956 விலை ரூபா [redacted]

என் தந்தை—தாயார்

ப. விஜயரங்க முதலியார்

ப. மாணிக்கவேலு அம்மாள்

ஞாபகார்த்தமாக இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டது

முகவுரை

இப் புஸ்தகத்தில், பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் உபயோகப் படக்கூடிய, ஒன்பது சிறு நாடகங்கள் அடங்கியிருக்கின்றன. இவற்றுள் "பெண்புத்தி கூர்மை" என்பது, திருச்சிராப்பள்ளி ரேடியோவுக்காக நான் எழுதியது. அதை அச்சிட எனக்கு அனுமதி கொடுத்த அந்த ரேடியோ தலைவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமை பட்டிருக்கிறேன்; மற்றவைகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் அமைக்கப் பட்டவைகளாம்.

இவைகளையாவது, நான் எழுதியுள்ள மற்ற நாடகங்களையாவது நடிக்க விரும்புவோர் எனது அனுமதியை முன்பு பெற்றே நடிக்க வேண்டுமென்பதைக் கவனிப்பார்களாக.

70 ஆச்சாரப்பன் தெரு,
சென்னை,
5—12—40

இப்படிக்கு
ப. சம்பந்தம்.

இருவர்களும் திருடர்களே

நாடக பாத்திரங்கள்

சிகந்தர் — ஓர் அரசன்

திருடன்

முதற் காட்சி

இடம்:—அரசனின் கூடாரத்திற்கெதிர். அரசனுக்கு முன்பாக பயங்கரமான முறட்டுத் திருடன் ஒருவனை கை கால்களில் விலங்கைப் பூட்டி சேவகர்கள் கொண்டுவந்து நிற்க வைக்கின்றனர்.

அ. ஆஹா? உனது தீய தொழில்களைப்பற்றி நான் அதிகமாய் கேள்விபட்டிருக்கிற தேசியத் திருடன் நீ தானு?

தி. நான் ஒரு தேசியன்—ஒரு படைவீரன்!

அ. படைவீரன்!-திருடன்!-கொள்ளையடிப்பவன்!-கொலைக்காரப்பாவி! தேசத்தையெல்லாம் பாழாக்கியவன்!—உன்னுடைய தைரியத்தை நான் மெச்சியபோதிலும்—உனது துர் நடத்தையை வெறுத்து, அதற்காக உன்னை நான் தண்டிக்க வேண்டும்.

தி. நீர் இவ்வாறு குற்றங் கூற, நான் என்ன செய்தேன்?

அ. என்னுடைய ஆக்ஞையை யெல்லாம் நீ அலட்சியம் செய்யவில்லையா? ஜனங்களுடைய அமைதியை அழிக்கவில்லையா? உன்னுடன் வசிக்கும் பிரஜைகளின் உடம்புகளையும் உடமைகளையும் கெடுப்பதில் உன் காலத்தைக் கழிக்கவில்லையா?

தி. அரசனே! நான் உமது கைதி—நீர் சொல்வதையெல்லாம் நான் கேட்கவேண்டியவனே! நீர் விதிக்கும் தண்டனையைப் பொறுக்க வேண்டியவனே! ஆயினும் எனது ஆன்மா உம்மால் ஜெயிக்கப்படவில்லை. ஆகவே நீர் கூறும் கடுமொழிகளுக்கு உத்திரவு சொல்வதென்ருல், சர்வ சுதந்திரமுடைய ஒருவனைப்போல் பதில் சொல்ல உத்திரவு கொடுக்கவேண்டும்.

அ. தாராளமாய்ப் பதில் உரை—நான் யாருடன் வார்த்தை யாட இசைகிறேனே, அவர்களை, என் சக்தியைக் கொண்டு மௌனமாயிருக்கும்படி அடக்க நான் விரும் பேன்.

தி. ஆயின்—உமது கேள்விக்குப்பதில் மற்றொரு கேள்வி யால் உரைக்கவேண்டும். தாங்கள் உங்களது ஆயுட் காலத்தை எப்படி கழித்தீர்கள் இதுவரையில் ?

அ. பெயர்பெற்ற சுத்த வீரனைப்போல்!—போர்வீரர்களுள் ஒப்புயர்வற்ற போர்வீரன், அரசர்களுள் உத்தமனை அரசன், அயல் நாட்டரசர்களை யெல்லாம் அடக்கியாண் டவர்களுக்குள் அதிபராக்கிரமசாலி! என்று என் புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறது! கேட்டுப்பார்!

தி. என்னுடைய புகழும் கொஞ்சம் பரவியிருக்கிறது! கேட் டுப்பாரும். தன்னுடைய-சிறு படையை என்னைவிட அதிக தைரியமாய் நடத்திய போர்வீரனை நீர் கண்ட துண்டா?—என்னைவிட—என்னையே நான் புகழ்ந்து கொள்வது நியாயமன்று. நீரே நன்றாயறிவீர், என்னை ஜெயிப்பதற்கு நீர் எவ்வளவு கஷ்டப்பட்டீரென்று!

அ. எப்படியிருந்த போதிலும் நீ ஒரு கொலைக்கஞ்சா திரு டன் தானே!-மானமில்லா நாணயங்கெட்ட, கொள்ளைக் காரன் தானே!

தி. தேசங்களை யெல்லாம் வெல்லும் வெற்றிவீரன் மாத்தி ரம் என்ன? எங்கணும் கேடுவிளைக்கும் பிசாசுகளைப் போல் உலகெங்கும் திரிந்து, சுகமாய் வாழ்ந்துகொண்டி ருந்தவர்களின் அமைதியை யெல்லாம் அழித்து, அவர் களது விவசாயத்தை யெல்லாம் பாழாக்கி, சட்ட மின்றி, நியாயமின்றி, எல்லோரையும் கொள்ளையடித் துக் கொன்று, துவம்சப்படுத்த வில்லையா? இவ்வளவும் எதற்காக? உலகிலுள்ள தேசங்களை யெல்லாம் அடக்கி ஆளவேண்டும் என்னும் அடங்கா உமது பேர் ஆசை யின் பொருட்டு! நூறு ஆட்களுடன் நான் சில ஜில்லாக் களுக்கு செய்ததை எல்லாம், நீர் நூறு ஆயிரம் சைனி யத்துடன் பல தேசங்களுக்குச் செய்தீர். நான் சில மனி தர்களுடைய சொத்துக்களை அபகரித்தால், நீர் பல அர சர்களையும் அரச குமாரர்களையும் அழித்திருக்கிறீர்.

நான் சில சிற்றூர்களைக் கொளுத்தியிருந்தால், நீர் உலகிலுள்ள அநேகப் பெரிய ராஜ்யங்களையும் பட்டணங்களையும் அக்னிக்கு இரையாக்கிப் பாழாக்கி யிருக்கிறீர். ஆகவே உமக்கும் எனக்கும் வித்தியாசம் என்ன? நீர் ஒரு அரசனாகப் பிறந்தீர், நான் ஒரு பிரஜையாகப் பிறந்தேன்-ஆகையால் என்னைவிட ஆயிர மடங்கு பெரிய கொள்ளைக்காரனாக, உமக்கு அதிர்ஷ்டம் வாய்த்தது !

அ. ஆயினும், நான் அரசனாக அன்னியர் சொத்தைக் கவர்ந்தால், அவற்றை யெல்லாம் அரசனாக மற்றவர்களுக்கு தானம் வழங்கி யிருக்கிறேன். பல ராஜ்யங்களை அழித்தால் அவற்றிலும் அதிகமாக ராஜ்யங்களை ஸ்தாபித்திருக்கிறேன். நான் எத்தனையோ கலைகளை அபிவிர்த்தி செய்திருக்கிறேன். எவ்வளவோ வியாபாரத்திற்கு உதவி புரிந்திருக்கிறேன்; வேதங்கள் முதலிய சாஸ்திரங்களையும் ஆதரித்திருக்கிறேன்.

தி- நானும், தனவந்தர்களிடமிருந்து பறித்த பொருளை ஏழை ஜனங்களுக்கு உதவியிருக்கிறேன்; காட்டு முரண்டிகளான என் கூட்டத்தார்களையெல்லாம் சீர்திருத்தி ஒழுங்குபடுத்தி யிருக்கிறேன். துராக்கிரதமாய்க் கீழ்ப்படுத்தப்பட்டவர்களைக் கைகொடுத்து தூக்கிப் பாதுகாத்திருக்கிறேன். நீர் கூறும் வேதாந்த சாஸ்திரம் எனக்கு ஒன்றும் தெரியாது, ஆயினும் இதைமாத்திரம் நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன்; நாமிருவரும் உலகினுக்குச் செய்த கெடுதிகளுக்குத் தக்க பிராயச்சித்தம் நம்மால் செய்ய முடியாது.

அ. [சற்று யோசித்து] போங்கள் நீங்கள் எல்லாம்—இவனது விலங்குகளைத் தறித்து விடுங்கள்—அவனுக்கு வேண்டியதைக் கொடுத்து உதவுங்கள்.

[திருடனைச் சேவகர்கள் அழைத்துச் செல்கின்றனர்]

அவன் கூறியபடி, எங்களிருவருக்கும், என்ன வித்தியாசமிருக்கிறது! பெரிய அரசனும் பெரிய கொள்ளைக்காரன் தானே?—இது யோசிக்கவேண்டிய விஷயமாகும்,

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றிற்று.

கானநாதனும் அவனது அமைச்சர்களும்

நாடக பாத்திரங்கள்

கானநாதன் — ஓர் அரசன்

ஆஸ்வீதன்
அபேரன் } அவனது அமைச்சர்கள்

முதற் காட்சி

இடம்—தென் மண்டபத்தில் கடற் கரையோரம்.
அலை வீசிக் கொண்டிருக்கிறது.

கா. மந்திரிகளே! எல்லா அரசர்களைவிட நான்தான் பெரியவன் என்று என்னிடம் நீங்கள் பன்முறை கூறியது உண்மைதானா?

அ. உண்மைதான அரசே! எல்லா அரசர்களைவிட தாம் தான் மிகவும் பெரியவர்.

ஆ. நாங்கள் எல்லாம் உமது அடிமைகள்-உங்கள் பாததூளியைச் சிரசால் வகிக்கிறோம்.

அ. நாங்கள் மாத்திரமல்ல, அப்பு தேயு வாயு முதலிய ஐம்பெரும் பூதங்களும் உமது அடிமைகளே. பிருத்வியாகிய உலகமெல்லாம் உமக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது; வருண பகவானுன சமுத்திரம் உமது ஆக்கினைக் குட்பட்டிருக்கிறது.

கா. ஆரவாரத்துடன் தன் அலைகளை மோதுகின்ற இந்த சமுத்திரமும் என் ஆக்கினைக் குட்பட்டிருக்கிறதா? இந்த பயங்கரமான அப்பு, நான் கட்டளையிட்டால் அமைதியுடனிருக்குமா?

அ. ஆம், கடலும் உம்முடையதே! உம்முடைய கப்பல்களையெல்லாம் தன் மார்பகத்தில் தாங்கும்படியாக சிருஷ்டிக்

கப்பட்டிருக்கிறது. உமது பகைவர்களைத் தன் ஆரவாரத்தால் பயப்படுத்துகிறது. ஆயினும் உம்மைத் தன் அரசனாக மதிக்கிறது.

கா. அலை வருகிறதா இங்கு ?

ஆ. ஆம் அரசே ! அதோ எழும்புகிறது பாருங்கள்.

கா. ஆனால் ஒரு நாற்காலியை இங்கு கொண்டுவாருங்கள்—இவ்விடத்தில் போடுங்கள் அதை.

அ. இங்கு—அலை படுகிற இடத்திலா—எம் இறையே ?

கா. ஆம், சரியாக இங்குதான் வையுங்கள்.

[அவர்கள் அப்படியே செய்கின்றனர்.]

ஆ. [ஒரு புறமாக] இவர் என்ன செய்யப் போகிறாரோ தெரியவில்லை !

அ. [ஒரு புறமாக] நாம் சொல்வதை நம்பும்படியாக அவ்வளவு முட்டாள் அல்ல இவர் !

கா. ஓ ! சக்தி வாய்ந்த சாகரமே! நீ என்னுடைய பிரஜை—என்னுடைய மந்திரிகள் அவ்வாறு கூறுகின்றனர்—ஆகவே என் ஆக்கினைக் குட்பட்டுக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியது உன் கடமை. ஆகையால் இதோ என் செங்கோலை உயர்த்தி, நீ பின்னிட்டுப் போகும்படியாக உனக்குக் கட்டளை இடுகிறேன். உயர்ந்து எழும் அலைகளே ! பின் வாங்குங்கள் ! உங்கள் அரசனும் எஜமானனுமான என் பாதங்களை, உமது கண்ணீரால் நனைக்காதீர்கள்!

ஆ. [ஒரு புறமாக] அரசராகிய இவரது ஆக்கினையைக் கொஞ்சமும் அது சட்டை செய்யுமென்று நான் நினைக்கவில்லை.

அ. [ஒரு புறமாக] அதோ பார் ஒரு பெரிய அலை வருகிறது !

ஆ. [ஒரு புறமாக] இந்த அலை அரசரது நாற்காலியருகில் வந்துவிடும்—நாம் இங்கிருத்தல் மூடத்தனமாகும், நமது உடம்பெல்லாம் உப்பு நீரால் நனைந்துவிடும்.

[அலையானது அவர்கள் மீது மோதுகிறது.]

கா. உம் !—ஏனையா மந்திரிகளே ! ஆர்கலியானது என் ஆக்கினைப்படி அடங்கி நடக்கிறதா ? அது என் பிரஜையா ஞல்—மிகுந்த ராஜத்துரோகியான பிரஜையா யிருக்கிறது! இதோ பாருங்கள்—எப்படி உயர எழும்பி, கோபத்துடன் தன் நுரையையும் உப்பு ஜலத்தையும் என்மீது வீசுகிறது, அரசனென்றும் பாராமல் அவமரியாதையுடன்!—முகமன் கூறும் மடையர்களே ! உங்கள் பொய்யான வார்த்தைகளால் நான் மோசம் போவேன் என்று எண்ணினீர்களா ? உங்கள் முகஸ்துதியை முற்றிலும் நம்பினேன் என்று மதித்தீர்களா ? இப்பொழுதாவது தெரிந்து கொள்ளுங்கள். இந்த சாகரமானது ஒப்புயர்வற்ற ஒருவருக்குத்தான் கீழ்ப்படிந்து நடக்கும் அவர் தான் திரிலோகங்களுக்கும் நாதன்—அரசர்களுக்கெல்லாம் அரசன் ! சக்ரவர்த்திகளுக்கெல்லாம் சக்கரவர்த்தி ! அவர் ஒருவர் தான் சமுத்திரத்தைப் பார்த்து " இவ்வளவு தூரம்தான் நீ போகக்கூடும்—இதற்குமேல் போகக் கூடாது, கர்வம் பிடித்த உனது அலைகள் இதைக் கடந்து செல்லலாகாது!" என்று கூற சக்தியுடையவர். அரசன் என்பவன் ஒரு மனிதனே ! அற்ப மனிதன் ? புழுவிற்குச் சமானம் ! ஆகவே அற்ப புழுவொன்று, அகிலத்தையும் சிருஷ்டித்து அடக்கியாளும், அரனுர் சக்தியை தான் உடையதாக எண்ணி, ஐம்பெரும் பூதங்கள் தன் ஆக்கினைக்கு உட்படும் என்று நினைக்கலாமா ?—இதோ இந்த கிரீடத்தை எடுத்துக் கொண்டு போங்கள்—இதை நான் அணிய மாட்டேன். உலகிலுள்ள அரசர்களெல்லாம், இந்த என் அனுபவத்தைக் கொண்டு கர்வமின்றி கீழ்ப்படிந்திருப்பார்களாக! நீங்கள் பட்ட அவமானத்தினல் மந்திரிகளெல்லாம் உண்மையை அறிவார்களாக.

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றிற்று

பாடலிபுரத்துப் பாடகர்கள்

நாடக பாத்திரங்கள்

ஒரு கிழக் கழுதை, கிழநாய், பூனை, கோழி,
நான்கு திருடர்கள்.

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்—பாடலிபுரத்துப் போகும்பாதை.
ஒரு கிழக் கழுதை மெல்ல வருகிறது.

க. வேலை செய்கிற வரையில் தீனி போட்டான்—வேலை செய்ய முடியவில்லையென்று தீனியை நிறுத்திவிட்டான்! எஜமான் பேரிலும் ஒருவிதத்தில் தப்பில்லை. என் தலை விதி!

வழியில் கிழ நாயை சந்திக்கிறது

ஐயா, நாய்க்கரே! ஏன் இப்படி நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?

நா. என் விதி கழுதையாரே! வயசாகிவிட்டது; முன்பு போல் வேட்டையாட முடியவில்லை, பலஹீனமாகிவிட்டது, என்று என்னை என் எஜமான் கொல்லப் பார்த்தான்—நான் சமயம் பார்த்து தப்பித்துக் கொண்டு வந்து விட்டேன். இனிமேலே எப்படி பிழைக்கிறது என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

க. நாயக்கரே, நான் சொல்வதைக் கேளும்; நான் பாடலிபுரம் போய் என் குரலைக்கொண்டு பாடி ஜீவனம் செய்யலாமென்று யோசிக்கிறேன். நீங்களும் என்னுடன் வாருங்கள், நான் காம்போதி முதலிய ராகங்களில் பல்லவி பாடும்பொழுதெல்லாம்' நீங்கள் உங்கள் வாயால்

மிருதங்க சாப்பு கொடுத்து வாருங்கள் ; நம்மிருவருக்கும் நல்ல ஜீவனம் கிடைக்கும்.

நா. சந்தோஷம்—அப்படியே செய்கிறேன்.

[கொஞ்சதூரம் போகிறார்கள்.]

வழியில் ஒரு பூனையை சந்திக்கிறார்கள்.

க. ருத்திராட்ச பூனையாரே!—என்ன சமாச்சாரம்? மூன்றாம் பேஸ்த்து வைத்த மாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

பூ. உயிர் தப்பி வந்த பிராணி எப்படி சந்தோஷமாயிருக்க முடியும்? எனக்கு வயதாகிவிட்டது, பல்லெல்லாம் மழுங்கிப் போச்சு, முன்பு போல் எலி பிடிக்க முடியவில்லை, சும்மா அடுப்பண்டை உட்கார்ந்துகொண்டு குளிர்காய்கிறேன் என்று என் எஜமானி என்னைத் தண்ணீரில் அமிழ்த்திக் கொல்லப்பார்த்தாள். நான் தப்பித்துக்கொண்டு வரப்பட்டபாடு பிரம்ம யத்தனமாயிற்று—இனி எங்கே போகிறது? எப்படி பிழைப்பது? என்று கவலையாயிருக்கிறது. நீங்கள் மிகவும் புத்திசாலி என்று மனிதர்கள் சொல்லுகிறார்களே, உங்களுக்கு ஏதாவது வழி தெரிந்தால் சொல்லுங்கள்.

க. நாங்கள் இரண்டு பேரும் பாடலிபுரம் போகிறோம்—பாடி ஜீவனம் செய்ய நீங்களும் எங்களுடன் வாருங்கள்—உங்களுக்குத் தான் மியா மியா, என்று தம்பூர் வாசிக்கத் தெரியுமே, நாம் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து பிழைக்கலாம்.

பூ. ஆஹா! அப்படியே ஆகட்டும்!

[மூவரும் கொஞ்ச தூரம் போகிறார்கள்.]

வழியில் ஒரு கோழி கத்திக்கொண்டிருக்கிறது.

க. ஐயா சேவல் கோழியாரே, காது செவிடாகும்படி ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்?

கோ. கத்தாமல் என்ன செய்வது நான்? காலையில் தினந்தோறும் நான் கூவி எல்லா வேலைக்காரர்களையும் எழுப்பி வேலையின்பேரில் விட்டேன் என்று, இதுவரையில்

சந்தோஷித்துக் கொண்டிருந்த என் எஜமானி, நானை யாரோ விருந்தினர் வீட்டுக்கு வரப்போகிறார்களாம், அவர்களுக்கு விருந்தாக என்னைக் கொன்று சமைத்துப் போடத் தீர்மானித்திருக்கிறாள்; ஆகவே நான் கத்திக் கொண்டிருக்கிறேன்.

க. ஐயா, சிவந்த கொண்டை சேவல் கோழியாரே! நான் ஒரு யுக்தி சொல்கிறேன் கேளுங்கள், நாங்கள் மூவரும் பாடலிபுரம் போய்ப் பாடி ஜீவனம்செய்யத் தீர்மானித் திருக்கிறோம். இங்கிருந்து சாவதைவிட எங்களுடன் வாருங்கள். உங்கள் குரல் கிளாரியனெட் போலிருக்கி றது; அந்த வாத்தியம் தான் எங்களுக்குக் குறைவா யிருக்கிறது. ஆகவே நாம் நால்வருமாகச் சங்கீத கச் சேரி பண்ணினால் எல்லாம் குறையின்றி சரியாகப்போய் விடும்.

கோ. ஆ! இது நல்ல யுக்திதான்.

[நால்வரும் கொஞ்சதூரம் போகிறார்கள்.]

க. அதோ! அங்கொரு வீடுபோல் தோன்றுகிறது; வெளிச் சம் தெரிகிறது ஜன்னல் வழியாக, அங்கு போவோம் வாருங்கள்.

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்—காட்டில் திருடர்கள் வீடு.

வீட்டிற்குள் நான்கு திருடர்கள் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்; ஜன்னல் அருகில் நான்கு பாடகர்களும் வருகிறார்கள்.

[ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்து] தோழர்களே! சரியான சமயத்திற்கு வந்தோம். இங்கே வீட்டில் நான்கு பெயர் சாப்பிட ஆரம்பிக்கப் போகிறார்கள்; நாம் நால்வருமாக கொஞ்சம் கச்சேரி பண்ணுவோமாகில், நமக்கும் ஏதா வது தின்பதற்குக் கொடுப்பார்கள். நான் ஒரு யுக்தி சொல்கிறேன் கேளுங்கள். ஐயா, சப்பை நாய்க்கரே:என் முதுகின் பேரில் ஏறிக்கொள்ளுங்கள்; ருத்திராட்சப் பூனையாரே, அவர் முதுகின்பேரில் நீங்கள் ஏறிக்கொள் ளுங்கள்; ஐயா சிவந்த கொண்டை சேவலாரே, எல் லோருக்குமேல் நீங்கள் பறந்து உட்கார்ந்து கொள்ளுங் கள். [அப்படியே செய்கின்றனர்.]

இப்பொழுது நாம் பாட ஆரம்பிப்போம்.

[கழுதை கத்துகிறது, நாய் குலைக்கிறது, பூனை சீறுகிறது, கோழி கொக்கரிக்கிறது. உள்ளே இருந்த திருடர்கள் ஐ ஐயோ! பிசாசு பிசாசு! என்று கூவிக்கொண்டு வெளியே ஓடுகின்றனர்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி

இடம்—அதே இடம். **காலம்**—இரவு.

நான்கு பாடகர்களும் சாப்பிட்டுவிட்டு எழுந்திருக்கின்றனர்.

க. நாம் எல்லாம் வயிறு நிரம்பச் சாப்பிட்டாச்சுது; இனி இங்கேயே படுத்துக்கொள்வோம்—ஒவ்வொரு மூலைக்கு ஒவ்வொருவராய். [அப்படியே செய்கின்றனர்.]

தலைக்கள்வன் வாயிற்படி வழியாக வருகிறான்.

த.க. என்ன இருட்டாயிருக்கிறது! ஆயினும் ஒரு சத்தத்தையும் காணோம்! நாம் வீணாக எதையோ கண்டு பயந்தோமோ என்னவோ? எதற்கும் விளக்கைக் கொளுத்திப் பார்க்கிறேன்—இந்த பயர்பாக்ஸ் குச்சி பற்றவில்லை!—சீ!—ஓ! இதோ அடுப்பண்டை நெருப்பிருக்கிறது—அதில் கொளுத்துவோம்.

[பூனையின் கண் அருகில் குச்சியை எடுத்துக் கொண்டு போகிறான். பூனை தன் நகத்தால் அவன் முகத்தில் கீறுகிறது.]

ஐ ஐயோ! [கூவிக்கொண்டு மற்றொருபுறம் போக, அங்கிருந்த நாய் அவன் காலைக் கடித்து விடுகிறது.]

ஐஐயோ! பிசாசு! பிசாசு!

[மற்றொருபுறம்போக கழுதை அவனை நன்றாய் உதைக்கிறது]

சந்தேகமில்லை! பிசாசுதான் பிசாசுதான்!

[வெளியில் ஓடப்பார்க்கிறான்; அப்பொழுது கோழி அவன் தலைமேல் உட்கார்ந்துகொண்டு கத்துகிறது.]

ஐ ஐயோ! பிசாசே! பிசாசே! என்னைவிட்டுவிடு!—நான் ஓடிப்போகிறேன்! இனிமேலே இந்த வீட்டிற்கு நுழையவே மாட்டேன்! நுழையவே மாட்டேன்!

[ஓடிப்போகிறான். நான்கு பாடகர்களும் சிரித்துப் பாடுகின்றனர்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

புத்திசாலிப் பிள்ளையாண்டான்

நாடக பாத்திரங்கள்

ஒரு பெரிய மனிதன்—ஒரு சிறுபிள்ளை.

முதற் காட்சி

இடம்:—ஒரு பெரிய சாலை.

ஒரு பெரிய மனிதர் நின்றுக்கொண்டிருக்கிறார்.

பிள்ளையாண்டான் ஒரு சின்னக் குதிரையைப் பிடித்துக் கொண்டு வருகிறான்.

பி. இந்தாங்க உங்க குதிரெ.

பெ. நிரம்ப சந்தோஷம், பையா! ஓடிப்போன என் குதிரையை மிகவும் சாதுர்யமாகப் பிடித்துக்கொண்டு வந்தாய். நீ கஷ்டப்பட்டதற்காக உனக்கு நான் என்ன கொடுக்க வேண்டும்?

பி. எனக்கு ஒண்ணும் வேணும்.

பெ. ஒன்றும் வேண்டாமா? ஆனால் நீ அதிர்ஷ்டசாலிதான்!—எத்தனைபேர் இவ்வுலகில் அம்மாதிரி சொல்ல முடியும்?—வயலில் நீ என்ன செய்துக்கொண்டிருந்தாய் சற்றுமுன்?

பி. களெ பிடுங்கிக்குனு இருந்தேன்.—ஆடுங்களெயும் மேச்சிக்கினு இருந்தேன்.

பெ. இந்த வேலை உனக்கு இஷ்டமாயிருக்கிறதா?

பி. ஆமாங்க, இந்த மாதிரி நல்லா சூரியன் காயும்போது, இந்த வேலை எனக்கு ரொம்ப இஷ்டமாயிருக்குது.

பெ. ஆனால் உனக்கு மற்ற பிள்ளைகளைப்போல் விளையாட இஷ்டமில்லையா?

பி. இது கஷ்டமான வேலே இல்லேங்க. இதுவும் எனக்கொரு வெளேயாட்டா இருக்குது.

பெ. இந்த வேலேயைச் செய்யும்படி உன்னே யார் நியமித்தது?

பி. எங்க நயிஞு.

பெ. அவர் எங்கே வசிக்கிருர்?

பி. அதோ அந்த மாந்தோப்புலே.

பெ. அவர் பெயர் என்ன?

பி. தம்பியப்பா பிள்ளே.

பெ. உன் பெயர் என்ன?

பி. பிஞுகபாணி.

பெ. உனக்கு என்ன வயதாகிறது?

பி. தீபாவளி வந்தா எட்டாவும்.

பெ. இந்த வயலிலே எத்தனே நாழியாக வேலே பார்த்து வருகிருய்?

பி. காலமெ ஆறுமணியிலிருந்து.

பெ. உனக்குப் பசிக்கவில்லேயா இப்பொழுது?

பி. நான் சாப்புட சீக்கிரம் போகப்போறேன் ஊட்டுக்கு.

பெ. இப்போது உன் கையில் அரை ரூபாய் கிடைத்தால் அதை என்ன செய்வாய் நீ?

பி. எனக்குத் தெரியாது—அவ்வளவு பணம் எங் கையிலே எப்பவும் இருந்ததில்லே,

பெ. விளேயாட்டுச் சாமான் உன்னிடம் ஒன்று மில்லேயா ?

பி. வெளயாட்டுச்சாமான் இண்ணு? அது என்னுதுங்க?

பெ. பந்து, கோலி, பம்பரம், காற்ருடி. மர பொம்மை முதலியன.

பி. இல்லேங்க. எங்க அண்ணுத்தெ, மழெகாலத்திலே நாங்கல்லாம் வெளெயாட தோலாலே பெரிய பந்துபண்ணிக் கொடுக்கருரு. குருவிங்களெ யெல்லாம் புடிக்கிரோம் நாங்க. பாஞு பழவ கோலிருக்குது; கால்லே கட்டிகினு

ஒயரமா நடக்க பெரிய ரெண்டு கொம்புங்க வைச்சிருக்கேன். இன்னம் ஒரு இரும்பு வளையம் இருக்குது, உருட்டிகினு போவ. ஆனு அது ஒடஞ்சி போச்சி கொஞ்ச நாளுக்கு முன்னே.

பெ. வேறொன்றும் உனக்கு வேண்டாமா விளையாட?

பி. இதுங்களே வைச்சிக்கினு வெளையாடவே எனக்குப் போதில்லையே? எனக்குவேலெ சரியாயிருக்குது. நான் எங்க ஊட்டுச் சின்னக் குதிரெயெ இட்டிக்கினு சந்தைக்குப் போரேன். ஆடு மாடுங்களெ யெல்லாம் பாத்துக்க வேண்டியதாயிருக்குது; பட்டணம் போயி என்ன மானு சாமானும் வாங்கிக்கினு வர்ரேன், இதெல்லாம் எனக்கு பெரிய வெளையாட்டாதான் இருக்குது.

பெ. ஆனாலும் உன் கையில் பணமிருந்தால் நீ மாம்பழம் வாங்கித் தின்னலாம், மசால் வடை வாங்கிச் சாப்பிடலாம், பட்டணம் போகும்போது.

பி. ஹூம்! எனக்கு ஊட்டுலே பெரிய மாம்பழம் கொடுக்கராங்க. மசால்வடை எனக்கு இஷ்டமில்லே. எங்க ஊட்டுலே எள்ளுண்டை சுட்டுத் தர்ராங்க எங்கம்மா. அதுவே நண்ணாயிருக்குது.

பெ. ஒரு சின்னக் கத்தி யிருந்தால் ஏதாவது சீவ உனக்கு உபயோகப்படாது?

பி. எங்கிட்ட ஒண்ணு யிருக்குது. இதோ பாருங்க—எங்கண்ணன்—தாமு அண்ணென்—எனக்குக் கொடுத்தான்.

பெ. உன் செருப்பெல்லாம் கிழிந்து போயிருக்குதே! புதியதாக ஒரு ஜதை உனக்கு வேண்டாமா?

பி. பட்டணம் போவும்போது போட்டுக்கினு போவ, நல்ல ஜதெ, ஒண்ணு எங்க ஊட்டுலே யிருக்குது.

பெ. இதைப் போட்டுக்கொண்டு சேற்றில் நடந்தால்காலெல்லாம் சேராய்ப் போகாதா உனக்கு?

பி. அது பரவாயில்லேங்க. ஊட்டுக்குப் போன ஒடனே கழுவி விட்டாபோவுது.

பெ. உன் குல்லாய் பழசாகி விட்டதே.

பி. எங்க ஊட்டிலே ஒரு புது குல்லா வைச்சிருக்கிரேன். இந்தக் குல்லாயே இல்லாதிருந்தா நல்லது. அத்தெப் போட்டுகிறத்துக்கு எனக்கு இஷ்டமே யில்லெ. எந் நேரம் போட்டுக்கினு இருந்தா தலெ நோவுது'

பெ. இல்லாமலிருந்தால், மழை பெய்தால் என்ன செய்வாய்:

பி. ரொம்ப மழை பேஞ்சா, அது நிக்கர வரைக்கும், ஒரு செடியிங் கீழே நிக்கிரேன்.

பெ. வீட்டுக்குப் போகிற வேளை வருவதற்குள் உனக்குப் பசியெடுத்தால் என்ன செய்வாய்?

பி. வயலிலே இருக்கிற முள்ளங்கியெ பச்சையாத் திண்ணிடுவேன்

பெ. முள்ளாங்கி அகப்படாவிட்டால்?

பி. பட்டினியா யிருக்கிறது. வேலெ செய்துக்கினு இருந்தால் பசியெல்லாம் தெரியாதுங்க.

பெ. இந்த வெயில் காலத்தில் உனக்கு தாகமெடுக்கிறதில்லையா?

பி. எடுக்குது ; சாப்பிட அந்த குளத்திலே நல்ல தண்ணி இருக்குதே.

பெ. தம்பி,—நீ நல்ல புத்திசாலி.

பி. அப்படியின்னு?

பெ. நீ புத்திசாலி என்று சொன்னேன். அந்த பதத்திற்கு உனக்கு இப்பொழுது அர்த்தம் தெரியாது?

பி. அது ஒண்ணும் தப்பில்லேங்களே?

பெ. [சிரித்துக்கொண்டே] தப்பு ஒன்றுமேயில்லே!—தம்பி, ஏதாவது வேண்டுமென்று உன் மனதில் இச்சையைக் காணேம். ஆகவே உனக்குப் பணத்தைக்கொடுத்து இச்சையை உண்டுபண்ண எனக்கிஷ்டமில்லே—உம் நீ பள்ளிக்கூடம் போகிறதில்லையா?

பி. இல்லிங்க, இந்த தை மாசம் அறப்பு அறத்தவுடனே என்னெ பள்ளிக் கூடத்துக்கு அனுப்பரதாவ எங்க நாயினு சொல்ராங்க.

பெ. அப்பொழுது உனக்கு புஸ்தகங்கள் வேண்டாமா?

பி. ஆமாம். பள்ளிக்கூடத்துக்குப்போர பசங்கள்ளாம்அரிச்சுவடி வாய்ப்பாடு கணக்கு, அல்லாம் வைச்சிக்கினு இருக்கராங்க.

பெ.. ஆனால் சரி.—நீ, "இருக்கிறதே போதும்," என்று இருக்கும் நல்ல பையன்! அதற்காக அந்த இரண்டு புஸ்தகங்களையும் உனக்கு நான் வாங்கித் தருகிறேன் என்று சொன்னதாக உன் நாயனுவிடம் சொல்—போ தம்பி. உன் ஆடுகளை மேய்க்கப்போ.

பி. நான் வர்றேனுங்க. [புன்சிரிப்புடன் கும்பிடுகிறான்]

பெ. புத்திசாலி! போய் வா அப்பா. [போகிறான்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

வெறுப்பும் விருப்பும்

நாடக பாத்திரங்கள்.

ராமபத்திரன்—பாலபரதன்

முதற் காட்சி

இடம்—*ஓர் நாட்டுப்புரத்து வீதி.* **காலம்**—*மாலை.*

ராமபத்திரனும் பாலபரதனும் *வருகிறார்கள்.*

பா. *இந்த மிட்டா யார் வசத்தில் இருக்கிறது இப்பொழுது?*

ரா. *குணலயர் என்பவர் வசம்.*

பா. *உங்கள் மிட்டாவுக்குப் பக்கத்து மிட்டாவல்லவா அது? நீங்கள் இருவரும் சமாதானமாய் வாழ்கிறீர்களா?*

ரா. *அதுதான் கிடையாது. இங்கு எங்கள் நடுவில் வந்துஎங்கள் எல்லோரையும் கெடுப்பதைவிட்டு, நூறு மைலுக்கு அப்பால் அவர் வாழ்ந்து கொண்டிருந்தால் நலமாயிருக்கும்.*

பா. *அதைக் கேட்க எனக்கு வருத்தமாயிருக்கிறது—என்ன அவர் மீது குறை கூறுகிறீர்?*

ரா. *ஒரு விஷயத்திலல்ல, எல்லா விஷயத்திலும் தான்! எல்லா விஷயத்திலும் எங்களிருவருக்கும் சச்சரவுதான். தேசீய விஷயத்தில் அவர் ஒரு கட்சியைச் சார்ந்தவர், நான் ஒரு கட்சியைச் சார்ந்தவன். இது ஒன்றேபோதும் நாங்கள் இருவரும் ஒற்றுமையாயிராமல் எப்பொழுதும் சண்டை போட்டுக்கொண்டு இருப்பதற்கு.*

பா. *அப்படி உறுதியாய் நான் எண்ணுவதற்கில்லை—இன்னுமென்ன?*

ரா. *இந்த பக்ஷி மிருகங்கள் முதலியவைகளைப் பாதுகாக்க நாங்கள் ஒரு சங்கம் ஏற்படுத்தினால், அதில் அவர் சேர*

மாட்டேன் என்ருர். இந்த ஊரிலுள்ள எந்தச் சபையி லும் அவர் அங்கத்தினராகவில்லே.

பா. அவரைக் கேட்டீர்களோ சேரும்படி?

ரா, நேராக யாராவது கேட்டார்களோ என்னவோ தெரி யாது. அவராக சேர்ந்திருக்கக் கூடாதா என்ன—மன மிருந்தால்? அவர் குணமே ஒருமாதிரி என்று நினேக்கி றேன், தனக்குத் தாளுக இருக்கிருர்; நான்கு பெயருடன் பேசுவதில்லே. அன்றியும் பரமலோபி யென்று நினேக்கி றேன்.

பா. அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?

ரா. பணம் அதிகமாயிருந்தும் அதற்குத் தக்கபடி வாழ்வைக் காணேம். அநேக விஷயங்களில் மிகவும் சிக்கனமாயிருக் கிருர் என்று கேள்விப்பட்டேன்.

பா. ஒருவேளே தன் பணத்தை எல்லாம் தர்மம் செய்கி ருரோ என்னவோ?

ரா. அவராவது, தர்மம் செய்வதாவது! அதொன்றுமில்லே என்று கட்டாயமாய்ச் சொல்வேன். போன வாரம் ஒரு குடியானவன் வீடு தீப்பற்றி, அவன் சொத்தெல்லாம் அழிந்தபோது, அவன் எங்களிடமெல்லாம் ஏதோ தர் மம் வாங்கிக்கொண்டு, அந்த ஜாப்தாவை அவரிடம் கொண்டுபோய்க் காட்டினுன். அவர் அவனுக்குக் கொடுத்ததெல்லாம் "இதைப்பற்றி யோசிக்கிறேன்" என்ற பதில் தான்.

பா. அப்புறம் யோசித்தாவது ஏதாவது கொடுத்தாரா?

ரா. அது எனக்குத் தெரியாது. ஏதோ இந்த சாக்கைச் சொல்லி அவனே அனுப்பிவிட்டார் என்பது என் அபிப் பிராயம். அப்புறம், இவருக்கு முன் இருந்த மிட்டாதார் தன் தோட்டத்தில் அநேக புஷ்பச் செடிகளே வைத்தி ருந்தார். யாராவது பூஜைக்கு புஷ்பம் வேண்டுமென்ருல் சும்மா கொடுப்பார். இவர் வந்த பிறகு அவைகளே யெல் லாம் எடுத்துவிட்டு மருந்துச் செடிகளே வைத்திருக் கிருர்.

பா. அது அவ்வளவாகத் தப்பாகத்தோன்றவில்லை எனக்கு. ஒருவேளை அந்த மூலிகைகளை எல்லாம் வியாதிக்காரர்கள் வேண்டினால் கொடுத்து வருகிறாரோ என்னவோ? அதில் என்ன தவறு?

ரா. அவர் தோட்டத்தை எப்படியாவது வைத்துக்கொள்ளட்டும், ஆயினும் ஜனங்களெல்லாம் அவரை மதிக்கச் செய்வதற்கு இது வழியல்ல. என்வரைக்கும் அவர் என் மீது துவேஷம் வைத்திருக்கிறார் என்று எண்ண வேண்டியவனாய் இருக்கிறேன்.

பா. அப்படியிருந்தால் அது மிகவும் தவறுதான்—நீர் இவ்வுலகில் ஒருவருக்கும் கெடுதி நினைப்பவர் அல்லவே; அப்படி யிருக்கும்போது உம்மீது அவர் துவேஷம் பாராட்டுவானேன்?—ஆயினும் உம்மீது அவர் துவேஷித்திருப்பதை எப்படி அறிந்தீர்கள்?

ரா. பல விஷயங்களில் அவருடைய குதிரைகளில் ஒன்றை விற்பதாகத் தெரிந்தது; அதை நான் அறிந்து, அதற்கு ஒரு விலை கொடுத்து வாங்குவதாகக் கோரினவுடன் அதை வேறு நாட்டிற்கு அனுப்பிவிட்டார். என் பெண் சாதிக்கு புஷ்பச் செடிகளை வளர்ப்பதில் மிகவும் பிரியம். அவள் ஒரு முறை அவர் தோட்டத்தின் புறமாகவண்டியில் சென்றபோது. ஏதோ ஒரு புதுமாதிரியான புஷ்பச் செடியை அவர் தோட்டத்தில் கண்டு, அதில் ஓர் கிளையை வாங்கிப் பதிபோட விரும்பினாள். இந்த விருப்பத்தை என் தோட்டக்காரன் அந்த குணலயர் வீட்டுத் தோட்டக்காரனுக்குத் தெரிவிக்க—இதைத் தெரிவித்தது எனக்கு இஷ்டமே இல்லை—அவர் தோட்டக்காரன் தன் எஜமானனுக்கு இதைச் சொன்னானாம். இந்தப் பெரிய மனிதர் ஒரு சிறிய கிளையைக் கொடுக்க இஷ்டமில்லாமல், அந்தச் செடியை தொடவும் கூடாதென்று கட்டளையிட்டாராம்! சுருக்கிச் சொல்லுமிடத்து, அந்தஸ்துடைய மனிதர்களுக்கு இருக்கவேண்டிய குணம் அவரிடம் ஒன்றுமில்லை. அவர் எப்படியாவது இவ்விடம் விட்டுப்போனால் போதும் எனக்கு!

பா. வாஸ்தவமாய் நமக்கு அயலிலுள்ள மனிதன் கெட்டவனாயிருப்பதைப்போல் அவ்வளவு சங்கடமான சந்தர்ப்பம் வேறொன்றும் கிடையாது. உங்களுக்கு அக்கதி

வாய்த்ததே என்று எனக்கு வருத்தமாயிருக்கிறது—இதோ யாரோ ஒரு மனிதன் உங்களுடன் பேச வருகிருன் போலிருக்கிறது.

ஒரு குடியானவன் வருகிருன்.

ரா. ஓ! அவன்தான் வீடுபற்றி எரிந்த மனிதன்! வாடாப்பா, ரங்கா, எப்படி யிருக்கிருய்? அந்த தர்ம ஜாப்தாவில் என்ன கிடைத்தது?

ர. எல்லாம் உங்க தயவு—என் நஷ்டமெல்லாம் சரியாப் போச்சுதுங்க.

ரா. மிகவும் சந்தோஷம். நான் கடைசியில் அந்த ஜாப்தாவைப் பார்த்தபோது உனக்கு வேண்டிய பணத்தில் பாதிகூடச் சேரவில்லையே.

ர. ஆமாங்க! அப்போ நீங்க மிட்டாதார் கொணலையர் என்ன கொடுத்தாரிண்ணு கேட்டது ஞாபகம் இருக்குதுங்களா? நானும், அப்பறம் யோசனெ பண்ணிச் சொல்றேண்ணு சொன்ருரிண்ணு சொன்னேன. அப்பாலே, மறுநாளு எங்க சேரிக்கு வந்து, என்னெப் பத்தியும் எனக்குவந்த நஷ்டத்தைப் பத்தியும் விசாரணெபண்ணுதாவ சொன்ருருங்க! கொஞ்ச நாள் பொறுத்து நான் அவரெ பாக்கப்போனப்போ, "நான் விசாரணெ பண்ணத்திலே நீ யோக்கியனிண்ணு தெரியுது, அக்கம் பக்கத்திலே இருந்தவங்களெல்லாம் ஒனக்காவ—சிபார்சு பண்ணுங்க அத்தொட்டு இன்னும் மத்தவங்க கிட்ட நீ கேட்க வேண்டியதில்லே." இண்ணு சொல்லி 50 ரூபாய் கொடுத்தாருங்க உடனே புண்ணியவான்! சாமி அவரை ரச்சிகணும்!

ரா. ஐம்பது ரூபாயா!

ர. ஆமாங்க! என் குடிசையெல்லாம் மறுபடியும் சரியா கட்டிக்கினே. இப்போ ஒரு வண்டிமாடு வாங்கப் போறேன்.

ரா. நல்ல தர்மம்! இப்படிச் செய்வாரென்று நினைக்கவில்லை, ரங்கா, உனக்கு நல்லகாலம் வந்ததைப் பார்க்க எனக்கு

சந்தோஷம்! உனக்கு செய்த உதவிக்காக அவருக்கு நீ மிகவும் நன்றி பாராட்டவேண்டும்.

ர. ஆமாங்க, அவருக்கும் எனக்கு உதவி செய்த எல்லாருக் கும்கூட! சாமி உங்களையெல்லாம் காப்பாத்தணும், நான் வர்ரேனுங்க. [போகிறுன்]

பா. மற்ற எந்தக் கெட்டகுணம் இருந்தாலும் அவரிடம் லோபத்துவம் இல்லை.

ரா. இல்லை, இதைப்பற்றி நான் எண்ணியது தவறுதான். அதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஆயினும் இப் படிப்பட்ட தயாளகுணமுடைய பெரிய மனிதர்கள் பெரிய விஷயங்களில் உதவுவதுபோல், அற்ப விஷயங் களிலும் தயாள குண முடையவராக இருந்து, மற்றவர் களிடம் ஹிதமான நடவடிக்கை உடையவர்களாக இராதது, வருத்தப் படத்தக்க விஷயம்.

பா. உண்மை வாஸ்தவமாய் அப்படி யிருந்தால் வருத்தப் படவேண்டிய விஷயம்தான்.

ரா. ஒரு குதிரைக்காகவோ அற்பச் செடிக்காகவோ கொஞ் சம் மரியாதை காட்டினால் என்னக் கெட்டுப்போகிறது?

பா. இதோ பூச்செடிகளைப்பற்றிப் பேசும்போது உம்மு டைய தோட்டக்காரன் பெரிய பூஞ்செடியை ஒரு தொட்டியில் கொண்டு வருகிறுன்.

தோட்டக்காரன் வருகிறுன்.

ரா. அடே, சாமி! என்னடாது தொட்டியில்?

சா. பூஞ்செடிங்க, மிட்டாதாரு குணலயர் கொடுத்தாரு, அம்மா கிட்டக் கொடுக்கச் சொல்லி.

ரா. உனக்கு எப்படிக் கிடைத்தது?

சா. அவர் தோட்டக்காரன் இத்தெக் கொடுக்கிறத்துக்காவ தங்கிட்ட என்னெ வரச் சொன்னன். முன்னேயே இதெ நமக்குக் கொடுத்திருப்பாங்களாம். கொஞ்சநாள்

பொறுத்துதான், பூமியிலேயிருந்து பேத்துக் கொடுக்ணும்ணு சொல்லி கொஞ்சம் நாளாச்சாம்.

ரா. இன்னும் இந்த மாதிரி செடிகள் அநேகம் அவரிடம் இருக்கிறதல்லவா?

சா. இல்லீங்க, ஒரு சின்ன நாத்துத் தான் இருந்துச்சி அவரு கிட்ட. அம்மா, இந்த செடி வோணும்ணு இஷ்டப்பட்டாங்கண்ணு தெரிஞ்சி, அவுங்களுக்கு இப்படிக் கொடுக்கணுமிண்ணு தீர்மானிச்சாங்களாம். நல்ல செடிங்க இது. இத்தெப்போலே வேறே ஆப்பட்டறது கஷ்டம்.

ரா. நல்லது நீ போ. [தோட்டக்காரன் போகிறுன்,]

பா. அவரிடம் மரியாதை மட்டாகக் காணேமே.

ரா. மிகவும் மரியாதை பாராட்டியிருக்கிருர். இதை நான் மறுக்க முடியாது; இதற்காக வந்தனம் செலுத்தவேண்டும். ஒருவேளை குதிரையை எனக்கு விற்கமாட்டேனென்பதற்காக இதையாவது செய்யவேண்டுமென்று தோன்றிஞற் போல் இருக்கிறது.

பா. இருக்கலாம்—ஆகையால் ஏதோ நல்ல சுபாவமுடையவராய்த் தான் தோன்றுகிறது.

ரா. ஆமாம்—ஆ! இதோ அவர் குதிரைக்காரன் வருகிருன். சந்தைக்குப் போய் திரும்பி வருகிருன் போலிருக்கிறது. அவனிடம் பேசிப் பார்க்கிறேன்.

குதிரைக்காரன் வருகிருன்.

தாமா, சந்தையிலே ஏதாவது குதிரை விற்கப்போயிருந்தாயா?

தா. ஆமாங்க.

ரா. நான் கேட்ட குதிரையை விற்றுவிட்டாயா என்ன?

தா. ஆமாங்க சாமி.

ரா. நான் கேட்டதற்கு மேலே எவ்வளவு கிடைத்தது? அதை எனக்கு விற்றிருக்கக்கூடாதா? அந்த விலையை நான் கொடுத்திருக்க மாட்டேனு?

தா. இல்லிங்க, அந்த குதிரெ நீங்க சவாரி பண்ண லாயக்கில் லிங்க. இந்த சமாசாரம் எங்க ஐயாவுக்கு நல்லா தெரியும். அது ஒரு பெரிய சனிபிடிச்ச கழுதைங்க! அத்தெ தேய்ச்சிக்கினு இருந்த மாலிஸை ரெண்டு தரம் கொல்லப் பாத்துதுங்க, அத்தொட்டு பாரம் ஏதாவது இழுக்க யாருக்காவது வந்த வெலெக்கி வித்துப்பூடிண்ணு எஜமான் சொன்னுருங்க.

ரா. இதற்காகத் தானு குதிரையை எனக்கு விற்க மாட்டேனென்றுர் உங்க எஜமான்?

தா, ஆமாங்க.

ரா. இந்த நன்றிக்காக நான் அவரை மிகவும் பாராட்டுகிறேன். [தாமன் போகிறுன்.]

அந்தமட்டும் எனக்கு நல்ல உதவி செய்தார்.

பா. உதவி மாத்திரமல்ல, உங்கள் உயிரையும் காப்பாற்றினுர்.

ரா, ஆம்; இனிமேல் அவசரப்பட்டு மற்றவர்கள்குணத்தைப் பற்றி தீர்மானம் செய்யலாகாது என்னும் புத்திமதியைக் கற்றேன், இங்கே பாருங்கள், நம்முடைய நாட்டிலே இந்தக் கட்சிபேதம் என்பது ஒன்றுவந்து நல்ல சுபாவமுடைய மனிதர்களை அதன் வலைக்குட் சிக்கச் செய்தது; அதனின்றும் விடுவித்துக் கொள்வது கஷ்டமாயிருக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் பாராட்டவேண்டிய பக்ஷத்தையும் பாழாக்குகிறது. அதோ, இந்தக் கெட்ட குணத்தினுல் கஷ்டதிசை அடைந்த ஒருவர் வருகிறுர் பாருங்கள்.

பா, யாரவர்?

ரா. பக்கத்து ஊர் சந்தையண்டை ஓர் பள்ளிக்கூடம் வைத்து வாழ்ந்துகொண்டிருந்த எளிய உபாத்தியாயர். சென்ற கிராமத் தேர்தலில் எங்கள் பக்கம் உழைத்ததால் அவரது பள்ளிக்கூடப் பிள்ளைகளையெல்லாம்

இழந்தார். அவருக்கு ஏதாவது உதவிபுரிய வேண்டுமென்று எனக்கு மிகவும் ஆவலா யிருக்கிறது; நிரம்ப யோக்கியர். கொஞ்சம் வாய்மாத்திரம் நிகளம்.

உபாத்தியாயர் வருகிறுர்.

வாரும், வாரும், க்ஷேமந்தானு?

உ. நமஸ்காரம், நிரம்பக் கஷ்டம் அனுபவித்தேன். ஆயினும் அவைகளெல்லாம் சீக்கிரம் தொலையும் காலம் வந்தது.

ரா. சந்தோஷம்—அதெப்படி?

உ. தோகையூர் பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலை காலியா யிருக்கிறதாம். அது எனக்குக் கிடைக்கும் என்று நினைக்கிறேன்.

ரா. அப்படியா! அப் பள்ளிக்கூடம் நமது எதிர் கட்சியைச் சேர்ந்ததல்லவா ?

உ. அப்படித்தான் ஐயா! இருந்தாலும் குணலயர் அந்த வேலைக்கு என்னைச் சிபார்சு செய்திருக்கிறுர். அதனுல் அந்த வேலை எனக்குக் கிடைக்குமென்று நினைக்கிறேன்.

ரா. குணலயரா? என்ன ஆச்சரியம்!

உ. எனக்கும் ஆச்சர்யந்தான்! அவர் ஒருநாள் என்னைத் தாளுக வரவழைத்தார். ஏதோ பேதமான அபிப்பிராயம் கொண்டதற்காக ஒருவன் ஜீவனத்தை இழப்பது மிகவும் தவறென்றும், அதற்காகத்தான் வருத்தப்படுவதாயும், வேறு ஒரு இடத்தில் எனக்கு ஏதாவது வேலை பார்த்துக் கொடுப்பதாகவும் சொன்னுர். பிறகு தோகையூரில் உபாத்தியாயர் வேலை காலியாயிருப்பதாகக் கூறி, என்னை அந்த ஊர் தர்ம பரிபாலன சபையாருக்கும் சிபார்சு செய்வதாகச் சொன்னுர்.

ரா. உம்முடன் சாதாரணமாகப் பேசினுரா அவர்?

உ. மிகவும் அன்யோன்யமாகப் பேசினுர். நம்முடைய நாட்டின் கட்சி பேதங்களைப்பற்றி நெடுநாழி பேசினேம். இந்தக் கட்சி பேதத்தால் நல்ல உத்தமர்கள் பிரிக்கப்

பட்டிருக்கிறீர்களே என்று வருத்தப்பட்டார். அச்சமயம் உங்கள் பெயரை எடுத்துப் பேசினேன். அவர் உங்களை நேரில் பரிசியம் இல்லை என்றும், ஆயினும் உங்கள் நற்குணத்திற்காக மிகவும் கௌரவம் பாராட்டுவதாகவும், ஏதாவது சமயம் பார்த்தால் உங்களுடன் அறிமுகம் ஆகி சிநேகிதராக வேண்டுமென்று விரும்புவதாகவும் கூறினார்.

ரா. சரி—நீங்கள் போய் வாருங்கள்.

[உபாத்தியாயர் போகிறார்.]

ரா. [கொஞ்சம் மௌனமாயிருந்து] வாருங்களய்யா, நாம் போவோம்.

பா. எங்கே?

ரா. உங்களுக்கு இதைப்பற்றிச் சந்தேகமா?—நேராக குணலயர் வீட்டுக்கு! இவ்வளவு தூரம் கேட்டறிந்த பின், நான் இதுவரை அவர்மீது தவறாக அபிப்பிராயப்பட்டதற்காக அவர் மன்னிப்பைக் கேட்காமல் இருக்கலாமா?

[இருவரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றிற்று

ஆலவீரன்

நாடக பாத்திரங்கள்

ஆலவீரன்	— ஓர் அரசன்
ஏலன்	— அவனது உத்யோகஸ்தன்
குப்பன்	— ஒரு குடியானவன்
காந்தாரி	— அவர் மனைவி

முதற் காட்சி

இடம்—*ஆற்றூர்.*

ஆலவீரன் ஒரு குடியானவன் வேஷத்தில் அழுக்கடைந்த வஸ்திரத்துடன் வருகிறார்.

ஆ. *இந்த இடத்தில் எல்லாம் எவ்வளவு நிம்மதியாயிருக்கிறது! இந்த ஆறானது இச்சிற்றூரைச் சுற்றி மெல்லெனச் செல்கிறது. இதைச் சுற்றிலும் சோலைகளிருப்பது இதைக் காப்பதுபோல் காண்கிறது. ரத்தவெறி பிடித்த தானவர் அமைதியையுடைய இச்சிற்றூரில் இன்னும் நுழையவில்லை. ஆகவே, இவ்விடத்தில் நான் ஒளிந்திருந்தால் என்னைக்கண்டுபிடிக்கமாட்டார்கள். இச்சிற்றூரில் யாராவது குடியானவர்கள் இருப்பார்கள். அவர்களைக் கொண்டு என் பசியை ஆற்றாவிட்டால் நான் மடிய வேண்டியதுதான்—ஹா! இதோ ஒரு ஒற்றையடிப் பாதை செல்கிறது—அதோ சற்று தூரத்தில் மரங்களுக்கிடையிலிருக்கும் ஒரு குடிசையிலிருந்து புகை கிளம்புகிறது—அங்குப்போய்ப் பார்க்கிறேன்.* [போகிறார்.]

காட்சி முடிகிறது,

*—4

இரண்டாம் காட்சி

இடம்—ஆற்றூரில் ஒரு குடிசை.

குப்பனும் காந்தாரியும் உள்ளே யிருக்கின்றனர்.

ஆலவீரன் அதற்குள் நுழைகிருர்.

ஆ. ஐயா, நமஸ்காரம்—நான் ஒரு பரதேசி. மிகவும் பசித்திருக்கிறேன். கொஞ்சம் ஏதாவது சாப்பாடு கொடுத்தால் புண்ணியமுண்டு.

கு. ஆமாம், இப்பதான் எங்கேபாத்தாலும் பிச்சைக்காரருங்க ஆயி பூட்டாங்க, அவுங்களுக்கெல்லாம் சாப்பாடு போடரதிண்ணு நாங்க பட்டினியா யிருக்கவேண்டியது தான்—ஏ! காந்தாரி! சமைச்சாச்சா? பொழுதெல்லாம் கட்டவெட்டி எனக்கு ஓஞ்சி போயிருக்குது, எனக்கும் பசியாயிருக்குது.

கா. ஆமாம்—ஒனக்கு எப்ப பாத்தாலும் பசிதான்! ஓலேயிலெ போட்ட அரிசி இன்னம் வேகலெ. இந்த அப்பங்கள்ளாம் சுட்டாவ இன்னம் கொஞ்ச நாழியாவும்; இன்னம் சூரியன் சாயரத்துக்கு பொழுதிருக்குது—இது யார் இது ஒரு ஆளே இழுத்துகினு வந்தையே?

ஆ. அம்மா தாயே!—நான் ஒரு பரதேசி—இராத்திரி எனக்கு கொஞ்சம் சாப்பாடு போட்டு, இங்கே தங்கிப் போக உத்திரவு கொடுங்கள்.

கா. இன்னம் நானு தாயாராகலெ அப்பா—வா அப்பா வா—ஆனாலும் இந்த பரதேசிங்களெ பாத்தா என் மனசு பொறுக்கிறதில்லெ—பரதேசத்திலிருந்து வந்து இந்த தேசத்தெயெல்லாம் பாழாக்கி வைக்கராங்க! இந்த தேசத்துலே வெளி தேசத்தாரு நுழைஞ்ச பொறவு, வேடிக்கெ—சந்தோஷம்—இண்றதெ போச்சு!

ஆ. நான் இந்த ஊருக்குப் பரதேசியானாலும், நான் இந்த தேசத்திற்கு வெளியானவன் அன்று—நான் இந்த தேசத்தில் பிறந்து வளர்ந்தவனே!

கு. ஆனா வெளிஊர்லே இருந்துவந்து, எங்க ஊருங்களெல்லாம் கொளுத்திவுட்டு, எங்க சாப்பாட்டையெல்லம்ா

திண்ணுட்டு, எங்க ஆடுமாடுங்களெயெல்லாம் ஓட்டிக்கினு பூடராங்களே-அவங்கள்ளெ ஒருத்தனில்லேயோ நீ?

ஆ. அல்ல—அவர்களை யெல்லாம் உங்களைப்போல் நானும் வெறுக்கிறேன்.

கா. வாஸ்தவமா?-வாஸ்தவமா சொல்லச் சொல்லு இவனெ.

ஆ. வாஸ்தவமாய் அவர்களை வெறுக்கிறேன் சத்தியமாக!

கு. ஆனால் உன் கையெக் கொடு அப்பா—நீ நல்ல மனுஷன்தான்—நீ யாரப்பா?

ஆ. ஆலவீர—ராஜன்—பக்கம். அவர் போட்ட கடைசி சண்டையில் நானும் சண்டை போட்டேன்.

கா. ஆலவீர ராஜன் பக்கமா?—அவர் க்ஷேமமாயிருக்கணும்!

கு. ரொம்ப நல்லவர் பாபம்!—அவர் என்னமானுரோ? பாவம்!

ஆ. ஏது அவர் மீது உங்களுக்கு அவ்வளவு பட்சம்?

கு. ஆமாம்—நாங்க ஏழைங்களா யிருந்தாலும் அவர் பேர்லே எங்களுக்கு ரொம்ப இஷ்டம். நாங்க தினம் ராத்ரியிலே கோவிலுக்குபோயி சாமியெ கும்பிடும் போது, அவர் எப்படியாவது இந்த தானவ நாயிங்களெ ஜெயிக்கணும் இண்ணு பொராத்திக்கிறோம்—அப்படி பொராத்திச்சும் அவருக்கு இன்னும் ஜெயிப்பு வல்லே.

ஆ. என்னைவிட அதிகமாக அவர்மீது உங்களால் அன்பு பாராட்ட முடியாது.

கு. அவர் என்னமானுரோ பாபம்?

ஆ. அவர் செத்துப் போய்விட்டதாக நினைக்கப்படுகிறது.

கு. ஐயோ பாவம்!—ஸ்வாமிதான் நம்பளெ யெல்லாம் ரட்சிக்கணும்! வா அப்பா—உக்கார்—எங்ககிட்ட இருக்கிற கூழெ நீயும் குடி—ரொம்ப பசியாயிருந்தா, பாலுஞ் சோறு உப்புஞ்சோறு, இண்ணு கவனிக்காது.

கா. ஆமாம்பா. வா—எங்க குடிசைக்கி, ராஜா வந்தா எப்படி சந்தோஷமா வரவழைப்போமோ, அப்படி உன்னெ வரவழைக்கிறோம்—அதிருக்கட்டும் — ஒனக்குத்தான்—இந்

தப் பரதேசிக்கி நம்போ சாப்பாடு போடவேண்டியது தான்—இல்லாப்போனு அது பாவமாவும்—இருந்தாலும், அவன் ஏதாவது வேலெ செய்யட்டுமே, சாப்பிடரத்துக்கு முன்னே—ஆள் பலசாலியா தான் இருக்கரான்-நண்ணு வேலெ செய்வாம் போலே யிருக்குதே.

கு. ஆமாமாம்—அது வாஸ்தவம்தான்—ஏண்டாப்பா? நீ என்னு வேலெ செய்வே?

ஆ. நீங்கள் என்ன வேலை யிட்டாலும் அதைச் செய்து உங்களுக்கு உதவ சித்தமாயிருக்கிறேன். நான் சாப்பிடுகிற சாப்பாட்டை நான் கஷ்டப்பட்டு சம்பாதித்து நான் சாப்பிட வேண்டுமென்பது என் விருப்பம்.

கு. ஏதோ பாக்கலாம்—கட்டைகளையெல்லாம் சரியாக கட்டு கட்டுவையா?

ஆ. நான் அதைச் செய்து வழக்கமில்லை. அதை சரியாகச் செய்யாது கெடுத்து வைப்பேனென்று பயப்படுகிறேன்.

கு. கூரைக்கி பில்லு மூடத்தெரியுமா? அந்த பசு கொட்டாயிலே கொஞ்சம் பிரிஞ்சிப் போயிருக்குது.

ஆ. ஐயோ! எனக்கு கூரை மூடத் தெரியாதே.

கா. இந்த நாணலுங்களெ மொடையத் தெரியுமா? கேளு—நம்பளுக்கு கூடைங்க வோணும்.

ஆ. அதை நான் கற்கவில்லை—எப்பொழுதும்.

கு. வைக்கலையாவது போர் போடுவையா?

ஆ. முடியாது.

கு. அடடே! என்னு ஆளுடா அப்பாநீ!—எங்களுக்கெல்லாம் இருக்கரமாதிரி ஓனக்கும் ரெண்டு கை இருக்குதே, என்ன பிரயோசனம்:—ஆயி—இவனுக்கு வீட்டிலெயெ ஏதாவது வேலெ கொடுத்துப்பாரு—அடுப்புக்கு கட்டெ கிட்டெ போடுவான்-இல்லாப்போனு சாமான்களெயெல்லாம் கழுவுவான்.

கா. ஆனு—இந்த அப்பங்கள்ளாம் பாணுவுலே வேவுதுங்க, அதுங்களெ பாத்துகட்டும், நான்போய் பால் கறக்கணும்.

கு. நானுபோய் அந்த கட்டைங்களை யெல்லாம் அடுக்கரேன்—சாப்பாடு ஆவத்தான் கொஞ்சம் நாழி ஆவுமே. [போகிருன்.]

கா. அப்பா, தம்பி! இந்த அப்பங்கள்ளாம் கருகிப் போவப் போவுது, அப்பப்போ திருப்பிகினே இருக்கணும்.

ஆ. நீங்கள் சொன்னபடி செய்கிறேன். [காந்தாரி போகிருள்.] அந்தோ! எனக்காக எவ்வளவு வேண்டுமென்றுலும் பொறுப்பேன், ஆயினும் துர்ப்பாக்கிய ஸ்திதியிலிருக்கும் சிங்களமே! உன் கதியைக் கருதும்போது என்மனம் பதைபதைக்கிறது; என் இருதயம் வெடித்துப்போகும் போலிருக்கிறது! கிழக்கு முதல் மேற்குவரை இத் தீபத்திலுள்ள நதிகளெல்லாம் ரத்தப்பிரவாகத்தால் ஓடுகின்றன! என் சுத்தவீரர்களெல்லாம் சின்ன பின்னமாக வெட்டப்பட்டார்கள்; என் எளிய பிரஜைகளில் சிலர் கொல்லப்பட்டனர்—இன்னும் சிலர் தங்கள் வீடுகளிலிருந்து அணிமணிகளை யெல்லாம் இழந்து, அவமானப்படுத்தப்பட்டு!—அடிக்கப்பட்டு!வெளியே துரத்தப்பட்டனர்! அவர்களை யெல்லாம் காப்பாற்றும்பொருட்டு ஜகதீசன் என்னை அவர்களுக்கு அரசனுக ஏற்படுத்தியும், இந்தப் படுபாவிகள் அவர்களைப் பாழாக்காதபடி காக்க வகையற்றவனு யிருக்கிறேன். கருணைக்கடவுளே? தானவர்களின் வாளுக்கு இரையாகாதபடி இந்நாட்டைக் காக்க எனக்கு யோக்கியதையில்லாவிட்டால், என்னை விட மேலாகப்போர்புரிந்து, வெற்றியடையக் கூடின ஓர் சுத்த வீரனை சிருஷ்டித்தருளும் இந்நாட்டிற்கு—நான் இங்கேயே இச்சிறு குடிசையில், இழிதொழில் புரிந்து, என் நாட்களைக் கழிக்கிறேன். எப்படியாவது சிங்களம் சந்துஷ்டி யடைந்தால் போது மெனக்கு!—ஓ!—இதோ வருகிறுர்கள் எனக்கு விருந்தளிக்கும் புருஷனும் பெண் சாதியும்.

குப்பனும் காந்தாரியும் வருகிருர்கள்.

கா. ஒன்னெத்தான், இந்த பால் பானெயெப் பிடிச்சி கொஞ்சம் எறக்கி வையி—இந்தப் புதுப்பாலும், அப்பமும், சாப்பிட்டா நல்ல பலம் கொடுக்கும்—ஐயோ! கெட்டேனே! இதென்ன, இந்த அப்பங்கள்ளாம் கரியா காந்தி போச்சே!—அடுப்புக்கரியா போச்சி! அதுங்களெ திருப்பியே போடலேயே!—தடியா! மடையா! சோம்பேறிப் பயலெ!

[ஆலவீரனை ஒரு சிறு சுள்ளியால் அடிக்கிருள்.]

ஆ. அம்மா! நான் செய்தது தப்புதான்—மன்னியுங்கள்—ஏதோ மனக்கவலையில் இருந்துவிட்டேன்.

கு. இந்தா!—போதும் நிறுத்து!—மன்னிச்சூடு பாவம்!—ஒரு வேளெ அவன் பெண்சாதியெ நெனேச்சிகினு இருந்தானே என்னமோ?—எனக்கு ஞாபகமிருந்து உன்னெ நானு கலியாணம் பண்ணிகின வொடனே—

கா, உம், கியாபக மிருக்குதா அது!

கு. வாஸ்தவமா!—ஞாபகமிருக்குது—ரொம்ப வருஷமான போதிலும்—அப்பொ—எங்கம்மா — பாயசம்—காய்ச்சிகினு இருந்தாங்க—அப்பொ—நானு—

கா. தா!—போதும் நிறுத்து!—நம்ப சாப்பிடலாம் வா.

[மூவரும் புசிக்கின்றனர்.]

ஆ. ஹா! புதிதாய்க் கறந்த இப்பால் என்ன ருசியாயிருக்கிறது! இந்த ரொட்டியும் என்ன நன்ருயிருக்கிறது!

கு. நண்ணு சாப்பிடப்பா—வவுறு நெறைய!—காந்தாரி—ராத்திரிக்கி எங்கே படுத்துக்குவான் இவன்?

கா நம்ப குடிசையிலெ ஒரு நாடா கட்டில்தான் இருக்குது. நம்பொ நெல்லு கொட்டகையிலே கொஞ்சம் வைக்கல் இருக்குது—அத்தெ பரப்பி—படுத்துகட்டும் இண்ணைக்கு—அப்பறம் பார்க்கலாம்—

ஆ. [தனக்குள்] அரசனைப்போல் நான் படுக்காவிட்டாலும் போர் வீரனைப்போல் படுத்துறங்குகிறேன் இன்றைக்கு!-அந்தோ! இந்த வைக்கோலும் கிடைக்காமல், எனது

போர்வீரர்களில் எத்தனை பெயர் கட்டாந் தரையில் படுத்துறங்குகின்றனரோ!

கா. அதென்ன அது சத்தம்? ஏதோ குதரைங்க வர்ராப் போலெ இருக்குதே, நீ போயி என்னாண்ணு பாரு வெளியே! [குப்பன் போகிறான்.]

ஆ, [ஒருபுறமாக] ஈசனே! என் துர் அதிர்ஷ்டமானது இந்த எளிய குடியானவர்களுக்கு ஒரு கெடுதியும் கொண்டு வராதிருக்க வேண்டும்!--ஐயோ! இதைவிட நான்காட்டிலெயெ மடிந்திருக்கலாகாதா!

குப்பன் வருகிறான். அவன் பின்னால் உருவிய கத்தியுடன் ஏலன் வருகிறான்.

கா. ஐயோ! சாமி! கத்தியெ உருவிகினு வர்ராரே யாரோ!

கு. தானவர்! தானவர்!—ஐயா! எங்களெக் கொல்லாதைங்க!

ஏ. அரசே! எம்மிறையே!—உங்களைக் கண்டு பிடித்தேனே! [அரசனுக்கு முழந்தாளிடுகிறான்.]

ஆ. [அவனை எழுப்பி கட்டியணைத்து] சுத்தவீரனாகிய ஏலனே! என்ன சமாசாரம்?

ஏ. மஹாராஜா! நான் சந்தோஷ சமாசாரம் கொண்டு வருகிறேன் உமக்கு. கானவாயில் கோட்டையில் முற்றுகையிடப்பட்ட உமது சைனியம், ஒரு தந்திரம் செய்து இரவில் வெளியே வந்து எதிரி கைதிகளை உறங்குகையில் எதிர்த்தனர்—சுருக்கிச் சொல்லுமிடத்து தானவர் சின்னபின்னமாக முறியடிக்கப்பட்டனர். தானவர் தலைவனான ஆபன், மரண காயமடைந்து கிடக்கிறான்.

ஆ. இது வாஸ்தவம்தானா?—நான் இன்னும் அரசன் தானா?

ஏ. அவர்களது பெயர்பெற்ற "நாணல் காகம்" எனும் கொடி பிடிக்கப்பட்டது நம்மவரால்! அவர்களது சைனியமெல்லாம் பயந்தோடுகின்றன நான்கு பக்கமும், நமது படைவீரர்களெல்லாம் உங்களை நாடுகின்றனர்.

இதோ இக்கடிதத்தில் மற்ற சமாசாரங்கள் எல்லாம் எழுதி யிருக்கிறது.

[ஒரு கடிதத்தைக் கொடுக்கிருள்.]

கு. [ஒருபுறமாக] ஐயோ! நம்பகதி என்னுவாவுமோ? ஏ பொம்பளே! உன் வாயெ கொஞ்சம் முன்னே நீ அடக்கி யிருக்கக் கூடாதா?

கா. [ஒருபுறமாக] ஐயோ! பாவி நான் என்ன செய்யரது! நம்பளெ எல்லாம் கொண்ணுடுவாங்க! நிச்சயம்!— இவர்தான் நம்ப ராஜ இன்னு யாரு நெனெச்சி யிருப் பாங்க?

ஆ. இந்த சமாசாரத்திற்காக ஈசனைப் போற்றுவோமாக! அதோகதியிலிருந்த என்னைக் கரையேற்றிவிட்டது தெய் வம்! அப்பா ஏலா! நான் மறுபடியும் கவசம் அணி வேனு? —நமது சிங்களப் படையை யுத்தத்திற்கு நடத்து வேனு?—அவர்களைக்கொண்டு வெற்றி பெறுவேனு?— நமது நண்பர்களெல்லாம் தலையெடுக்கும் காலம் வந்து விட்டதா?

ஏ. ஆம், உங்களுக்கு அநேகம் நண்பர்கள் இருக்கின்றனர். அவர்களெல்லாம் இதுவரையில் தங்கள் எஜமானனை உங்களைப்போல், காடுகளிலும், குகைகளிலும் பாலை வனங்களிலும் காலம் கழித்து வந்தனர். அன்றியும் குடி சைகளிலும் ஒளிந்து வந்தனர்; நீங்கள் உயிருடன் இருப் பதையும், படையை மறுபடியும் சேர்ப்பதையும் கேள் விப்படுவார்களாயின், தாங்கள் ஒளிந்திருக்கும் இடங் களை யெல்லாம் விட்டு வெளி வந்து, உமது பக்கத்தை அணுகுவார்கள்.

ஆ. அவர்களை யெல்லாம் மறுபடியும் யுத்த களத்திற்கு அழைத்துச் செல்ல ஆவல் மீறுகிறது. நமது தேசத்தின் பகைவர்மீது பழிவாங்க வேண்டும் சீக்கிரம்!

கு.கா. [அவர் பாதத்தில் விழுந்து] மஹாராஜா! மஹாராஜா!

கா. பாவிங்க எங்களெ வதை செய்யாமே கொண்ணுடும்படி கேட்டுக்கரோம்—நீங்க மஹாராஜா இன்னு எங்களுக் குக் கொஞ்சங்கூட தெரியாமே போச்சி!

கு. மஹாராஜா! எப்படியாவது இந்த பொம்பளெ திட்டினதெயெல்லாம் மன்னிச்சூடனும், அவ ஒணுமிண்ணு திட்டலெ பாவம்!

ஆ. எனது நல்ல பிரஜைகளே! உங்களை மன்னிப்பதாவது! உங்களுக்கு வந்தனமல்லவோ அளிக்க வேண்டும்! நான் துர்ப்பாக்கிய ஸ்திதியிலிருந்தபொழுது என்னைக் காப்பாற்றினீர்கள்! நான், ஈசன் அருளால், மறுபடியும் சிங்களத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருந்தால் எனது முதற் கடன், நீங்கள் எனக்கு விருந்தளித்ததற்குக் கைம்மாறு செய்வதாகும். உங்களை நான் காப்பாற்றுகிறேன்.—வா அப்பா. நண்பா ஏலா, எடுப்போம் நமது படையை! கர்வம் பிடித்த இத்தானவர்களை மறுபடியும் எதிர்க்க என் மனம் துடிக்கிறது! இதோ ஈசன்மீது ஆணைப்படி சத்தியம் செய்கிறேன். இக்கொள்ளைக்காரர்களை யெல்லாம் நமது தேசத்தை விட்டுத் துரத்தி, நமது நாட்டிற்கு சீரும் செழிப்பும் கொண்டுவருமளவும் என் கத்தியை உரையில் போடேன்! ஜெய்!

ஏ. ஜெய்! [ஆலவீரனும், ஏலனும் போகிறார்கள்]

கு.கா. நம்ப நல்ல ராஜாவுக்கு ஜெய முண்டாகணும்! ஜெய்! ஜெய்!

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றிற்று

தான் பிறந்த ஊர்

நாடக பாத்திரங்கள்

ஹரிபக்தன், பரமநாதன், ஒரு சிறுபெண்,
ஞானபாசன், மாரியம்மாள்.

முதற் காட்சி

இடம்—தோப்புகளால் சூழப்பட்ட ஒரு சிற்றூர்.
ஹரிபக்தனும் பரமநாதனும் வருகிறார்கள்.

ஹ. இந்த இடம்தான்—இந்த பசும் புற்றரையில்தான் எனது சிறிய நண்பர்களுடன் நான் பலநாள் விளையாடினேன். அதோ, அந்த மரங்கள் மீது எத்தனை முறை நான் அவைகளிலிருக்கும் பட்சிகளின் கூடுகளுக்காக, ஏறி யிருக்கிறேன்! கொட்டாங்குச்சிக் கப்பல்களை நான் விட்டு விளையாடிய குட்டை அதோ அங்கிருக்கிறது; என்னென்ன ஞாபகங்கள் எல்லாம் என் மனதிற்கு வருகின்றன! சில வருத்தத்தைத் தருகின்றன, சில சந்தோஷத்தைத் தருகின்றன. ஆம்—இவ்வுலகில், மற்ற இடங்களில் காணும் காட்சிகளைவிட நாம் பிறந்த இடத்தில் தோற்றும் காட்சிகள், ஒரு தனிமையான வழியில் நமது மனதில் உறுத்துகின்றன.

ப. அப்படியானால் இந்த இடம் தான் நீர் நாடிவந்த இடம். அநேக வருஷங்களுக்கு முன் நீர் இதை விட்டுப் பிரிந்தபடியால், நீர் பட்சம் வைக்கத்தக்க உறவினர், சிநேகிதர்கள், ஒருவரும் இங்கு இருப்பதற்கில்லை.

ஹ. இல்லைதான்—எனக்கு உறவினர் ஒருவருமில்லை—எப்பொழுதும் இருந்ததில்லை யென்றே சொல்ல வேண்டும். நீ அறிந்தபடி, என் தாய் தந்தையர் மடிந்தவுடன் என்னைக் காப்பாற்றுவார் ஒருவருமில்லை. என்னுடன் பிறந்தவர்களெல்லாம் பல இடங்களில் பிரிந்து

போயினர், எங்கள் குடும்பத்திற்கிருந்த கொஞ்சம் சொத்தும் விற்கப்பட்டது. பிறகு என் செவிலித்தாயும் அவள் புருஷனும் என்னைப் பாதுகாத்து வந்தனர். என் சவரட்சணைக்காக கொடுக்கப்பட்ட சிறிது பணமும் சில வருடங்களில் நின்றுவிட்டது.

ப. பிறகு நீர் எப்படி சவரட்சணை செய்யப்பட்டீர்?

ஹ. என்னை வளர்த்து வந்த புருஷனும் பெண்சாதியும் என்னை அதிக அன்போடு வளர்த்தனர். அவர்களிருவரும் மிகவும் ஏழைகளாயிருந்தபோதிலும், தங்கள் சொந்த குழந்தைகளுடன் என்னையும் ஒருவனாக வளர்த்து வந்தார்கள்; அன்றியும் நான் அனாதையான போதிலும் என் குடிப்பிறப்பிற்குத் தக்க செல்வாக்குடன் வளர்த்தனர். இங்கிருந்த மடத்துத் தம்பிரான் ஒருவர் உதவியைக் கொண்டு, ஒரு தெருப்பள்ளிக்கூடத்திற்கு என்னை அனுப்பினர்; எனக்கு வேண்டிய உண்டி உடைகளையும் உதவினர். அன்றியும் அவர்களிருவரும் குடி முதலிய துர்க்குணங்களில்லாத, தெய்வபக்தியுடையவர்களா யிருந்தபடியால், என்னை நல்லபடி வளர்த்து வந்தனர். என் கோரிக்கை யெல்லாம் அவர்களுக்கு நான் செய்ய வேண்டிய கடமையை என்றும் நான் மறக்கக்கூடாதென்பதாம். அவர்களை எப்படியாவது காணவேண்டுமென்றே நான் உன்னை அழைத்துக் கொண்டு இவ்வளவு தூரம் வந்தது.

ப. எத்தனை வயது வரையில் அவர்களுடன் இருந்தீர் நீர்?

ஹ. எனது பதின்மூன்றும் வயது வரையில். பிறகு என் தேசத்தின் சுயராஜ்யத்தின் பொருட்டு நான் சண்டை போட வேண்டுமென்று அடக்கப்படாதபடி உந்தப்பட்டேன். அகஸ்மாத்தாய், எனது தூரபந்து ஒருவர் ஒரு போர்க்கப்பலின் தலைவராக இருந்தார் என்று கேள்விப்பட்டு, என்னைப் பாதுகாத்த உத்தமர்களிடமிருந்து விடைபெற்று, அவர் இருந்த துறைமுகம் போய்ச் சேர்ந்தேன். பிரயாணத்திற்கு வேண்டியவைகளை யெல்லாம் அவர்கள் தங்களாலியன்ற அளவுக்கு எனக்கு உதவினர்; அவர்களை நான் விட்டுப் பிரிந்த பொழுது, என்ன அன்புடன் எனக்கு ஆசிகூறி அனுப்பினர், என்பதை நான் என்றும் மறவேன், என் சொந்

துத்தாய் தந்தையர்களும் அவ்வளவு பரிவுடன் என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டார்கள். அக்கப்பலில் நான் சிறு ஆளாய்ச் சேர்ந்தது முதல், "பாரதமாதா" எனும் கப்பலுக்கு நான் தலைவனான வரையில், என் விர்த்தாந்த மெல்லாம் உனக்குத் தான் தெரியுமே. இந்த புண்யாத் மாக்களை விட்டுப் பிரிந்து பதினைந்து வருடங்களான போதிலும், எனக்கு அவர்கள் மீதிருக்கும் அன்பானது அதிகரித்திருக்கிறதே யொழிய குறைந்த பாடில்லை. ஆகவே இப்பிரதேசத்தில் அடியெடுத்து வைத்தவுடன் முதலில் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று தீர்மானித்தேன். அதுவரையில் என் மனம் நிம்மதி யடையாது.

ப. அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கிறார்களோ என்னவோ, அதுவே சந்தேகம்.

ஹ. இந்த சிற்றூரான் ஒருவனை கொஞ்ச காலத்திற்குமுன் சந்தித்தேன், அவன் அவர்கள் இன்னும் உயிருடன் இருப்பதாகத் தெரிவித்தான், ஆயினும் அவர்கள், அதிக ஏழைகளாயினர் என்றும் சொன்னான்.

ப. அவர்கள் எங்கே வசித்துக்கொண்டிருந்தார்கள் ?

ஹ. இந்தத் தெருவின் திருப்பத்தில்—என்ன இது ? அந்த வீட்டையே காணோமே ! அது இருந்த இடம் எனக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறது; ஒருவேளை அதை இடித்து விட்டார்களோ என்னவோ ?—ஐயோ ! சிறுவயதில் எனக்குபகாரம் செய்தவர்களே ! உங்கள் கதி என்ன வாயிற்றோ ?

தூரத்தில் ஒரு பெண் வருகிறாள்.

ப. அதோ அந்த சின்ன பெண்ணைக் கேட்டுப்பாருங்கள்.

ஹ. இந்தம்மா, குழந்தை!—இங்கே ஞானபாசன் என்று ஒருவர் இருந்தாரே தெரியுமா அவரை, உனக்கு ?

பெ. யாரு? தாதா ஞானபாசரையா? ஓ! நன்னா தெரியுமே எனக்கு—அவர் பொஞ்சாதி மாரியம்மாளெகூடத் தெரியும்.

ஹ. அவர்கள் எங்கே வசிக்கிறார்கள்?

பெ. இந்த சந்துலெ கொஞ்சதூரம் போனா அவுங்க வூடு இருக்குது,

ஹ. இந்த மூலேயில் அவர்கள் முன்பு வாழ்ந்திருக்கவில்லேயா?

பெ. ஆமா, அந்த ஜமீன்தார் ஏஜெண்டு, ஒரு வெத்திலே தோட்டம் போடணும் இண்ணு அந்த வூட்டே இடிச்சுட்டாரு.

ஹ. வா அம்மா, எங்களோடெ வா — அந்த விட்டைக் காட்டு, உனக்கு காலணு தருகிறேன்.

பெ. அப்படியே ஆவட்டும்.

[கொஞ்சதூரம் அழைத்துக்கொண்டு போகிருள்.]

—அதோ—அந்த வெழல்கூரெ போட்டிருக்கிற வூடு தான் அவங்குளுது—அதோ பாருங்க, மாரியம்மா கைராட்டினம் வைச்சிகினு நூல் நூத்துகினு இருக்கராங்க,

ஹ. இந்தாம்மா,

[ஒரு பைசா கொடுக்க, அதை வாங்கிக்கொண்டு போகிருள்.]

என்னிருதயம் எப்படி அடித்துக்கொள்ளுகிறது!— அதுவா என்னே வளர்த்த செவிலித்தாய்?—ஆம் ஆம், இப்பொழுது ஞாபகம் வருகிறது! எவ்வளவு கிழவியாகி விட்டாள்!—ஏதோ வியாதியால் மிகவும் மெலிந்து போயிருப்பதுபோல் காண்கிறது.

ப. பதினேந்து வருஷங்களாயினவே நீங்கள் பார்த்து;அன்றியும் ஏதோ கஷ்ட நிஷ்டூரங்களெல்லாம் அனுபவித்திருக்கிறார் போலிருக்கிறது. அதுதான் இப்படி மெலிவடையச் செய்திருக்க வேண்டும்.

மாரியம்மாள் வெளியே வருகிருள்.

ஹ. [குடிசையின் கதவண்டைப் போய்] அம்மா, நமஸ்காரம்— எனக்கும் என் தோழனுக்கும் ஏதாவது தாகத்திற்குக்

கொடுக்க முடியுமா?—எங்களுக்கு மிகவும் தாகவிடாயா யிருக்கிறது—இந்த வெயிலில் துலேதூரம் நடந்தபடி யால்.

மா. ஐயா, எங்களிடம் ஜலம்தான் இருக்கிறது, அதைக் குடிப்பதானுல் கொண்டு வருகிறேன்.

ப. சந்தோஷம்—கொஞ்சம் தயவுசெய்து கொண்டு வாருங் கள்.

மா. ஐயா, வெயிலில் நிற்கிறீர்களே—இங்கே உள்ளே வாருங் கள் கொஞ்சம், வெயில்படாதபடி. இது எங்கள் வீடு— இதோ இவ்வாசனத்தில் உட்காருங்கள்—நான் போய் தண்ணீர் மொண்டு கொண்டு வருகிறேன். [போகிருள்.]

ஹ. [ஒருபுறமாக] அதோ வயோதிகன்!—உள்ளே போகலாம் வா. [உள்ளே போகின்றனர்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

குடிசையின் உட்புறம் வயோதிகனுன ஞானபாசன் உட்கார்ந்திருக்கிருன். ஹரிபக்தனும், பரமநாதனும் நின்று கொண்டிருக்கின்றனர்.

ப. ஐயா, நாங்கள் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரும்படி உங்கள் மனைவிக்குக் கஷ்டம் கொடுத்திருக்கி ருேம்.

ஞா. உட்காருங்கள்—ஐயா—உட்காருங்கள்—நான் உட்கார்ந் திருக்கும் நாற்காலியை நீங்கள் உட்கார உங்களுக்குக் கொடுத்திருப்பேன்—என் துர் அதிர்ஷ்டத்தால் எழுந் திருக்க முடியாதவனுயிருக்கிறேன்—முடமாய்; என் கண் களும் நன்ருய்த் தெரியவில்லை.

ஹ. [ஒரு புறமாக] ஐயோ பாபம்! முடமும் குருடுமா!

ஞா. ஆமாங்க—எப்படியும் வயசாகி பலஹீனப்பட வேண்டி யது தானே!—அதைத் தடுக்க யாரால் முடியும்! எல் லாம் ஈசன் செயல்!

ப, ஐயோ! நீங்கள் இன்னும் வேலே செய்துதானு ஜீவிக்க வேண்டும்?

ஞா. எங்களால் ஆனமட்டும் வேலைசெய்து பிழைத்து வந்தோம்—தற்காலம் என்னால் ஒரு வேலையும் செய்யச் சக்தியில்லை—என் பெண்சாதியோ, பாவம்! அவளும் கிழவியாகி விட்டாள் நூல் நூற்று என்ன சம்பாதிக்க முடியும்? ஆகவே அன்னதான சமாஜத்தார் தர்மத்தில் காலட்சேபம் செய்துவருகிறோம்.

ஹ. அன்னதான சமாஜமா! நீங்கள் ஒருகால் நன்றாய் வாழ்ந்தவர்கள் என்பதைக் கவனித்து, அவர்கள், உங்களுக்குப் போதுமான உதவி செய்கிறார்களா?

ஞா. அவர்கள் மீது நான் குறை கூறவில்லை ஐயா, ஒரு வாரத்திற்கு எட்டணா கொடுக்கிறார்கள், இந்த கஷ்ட காலத்தில் அது எவ்வளவிற்கு?

ஹ. வாஸ்தவமே—அது எவ்வளவிற்கு!—இவ்வளவுதானா அவர்கள் உதவுகிறார்கள்!

ஞா. ஆமா மையா, அதுகூட இனிமேல் கொடுக்க முடியாது, நீங்கள் சமாஜத்தின் தொழிற்சாலைக்கு வரவேண்டும், என்று சொல்லி யனுப்பியிருக்கிறார்கள்.

மாரியம்மாள் ஒரு பாத்திரத்தில் ஜலம் கொண்டு வருகிறாள்.

மா. இந்தாங்கள் ஐயா, இப்பாத்திரம் சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படியே நீங்கள் சாப்பிடலாம்.

ஹ. சமாஜத்தின் தொழிற்சாலைக்கா வரும்படி சொன்னார்கள் என்று கூறினீர்?

மா. ஆமாம் ஐயா, அதைக்கேட்டது முதல் என் புருஷன் மிகவும் கவலையுடனிருக்கிறார். சாகிற காலத்தில் நாங்கள் தொழிற்சாலையில் சாகவேண்டுமா என்று! நாங்கள் இதைவிட கொஞ்சம் நல்ல ஸ்திதியில் வாழ்ந்தவர்கள்—வாஸ்தவமாய்—நாங்கள் கொஞ்சம் நிலம் வைத்துக் கொண்டு பயிர்செய்து கொண்டிருந்தோம்; அவ்விடமிருந்த, அந்தக் கோயில் பக்கத்தில் வசிக்கும் ஜமீன்தார் ஏஜெண்டு, எங்களைத் துரத்தி விட்டான். அது முதல் நாங்கள் வரவர ஏழைகளாகி, பலஹீனப்பட்டவர்

களாகி வருகிறோம், இப்பொழுது எங்கள் கையில் ஒரு சொத்துமில்லை.

ஞா. [கண்ணீர்விட்டு] ஈஸ்வரா! ஈஸ்வரா! அன்னதான சமாஜத்தின் தொழிற் சாலையிலா சாகவேண்டும்! அதை நினைக்கவும் என் மனம் தாளவில்லை.—ஆயினும் மேலே இருக்கிறாரே, அவருக்குத் தெரியும் எது எங்களுக்கு நல்லதென்று! அவர் இச்சைப்படி யாகட்டும்! அதற்கு நாங்கள் கீழ்ப்படிய வேண்டியவர்களே!

ஹ. ஐயோ! உங்களுக்கு குழந்தைகள் இல்லையா? சிநேகிதர்களில்லையா உங்களுக்கு இக்கதியில் உதவிசெய்ய?

ஞா. ஐயா, எங்கள் குழந்தைகளெல்லாம் காலமாய் விட்டார்கள்—ஒருவன் தவிர—அவனும் தூரதேசத்தில் வாழ்ந்து வருகிறான்—எங்களைப் போல் ஏழையாக.

ப. நண்பர்களே, உங்களைப்போன்ற உத்தம ஜனங்களைப் பாதுகாக்க ஒருவருமில்லாமலா போயிற்று?

மா. இல்லையுங்கள்! எங்கள் அக்கம் பக்கத்திலிருப்பவர்களைத் தான் நாங்கள் அறிவோம். அவர்கள் நாங்கள் தொழிற் சாலைக்குத்தான் போகவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

ஹ. ஏனையா, முன் நாளில் ஹரிபக்தர் குடும்பம் என்று ஒரு குடும்பம் இவ்வூரிலில்லையா?

ஞா. இருந்ததுங்கள், அது நிரம்ப காலத்திற்கு முன்னால்—அக்குடும்பத்தாரெல்லாம் செத்துப் போய் விட்டார்கள் என்று நினைக்கிறேன். அல்லது தூரதேசம் போயிருக்க வேண்டும்.

மா. ஆம், அந்த குடும்பத்தின் கடைசி குழந்தை, எல்லோரையும்விட நிரம்ப அழகு, அவன் எங்கள் வீட்டில்தான் வளர்ந்து வந்தான்; நாங்கள் அந்தக் கழனியருகிலுள்ள வீட்டில் வாழ்ந்தபொழுது. பதின்மூன்று வருடம் எங்களுடன் வளர்ந்து வந்தான்; நிரம்ப நல்லபிள்ளை, என் சொந்த குழந்தையைப் போல் நான் அவனை வளர்த்து வந்தேன்.

ஹ. அவன் பிறகு என்னவானான்?

ஞா. அவன் நிரம்ப குணசாலியாயிருந்தபோதிலும், மிகுந்த தைரியமும் வீரமும் வாய்ந்தவன்; ஆகவே, கடைசி யுத்தம் வந்தபொழுது, கப்பல் படையைச் சேர்ந்து, யவனர்களுடனும் சுவர்ண பூமியார்களுடனும் சண்டைபோட வேண்டுமென்று, புறப்பட்டுப் போய்விட்டான்-நாங்கள் எவ்வளவு தடுத்தும் பிரயோஜனப்படாதபடி. அதற்கப்புறம் அவன் செய்தி நாங்கள் ஒன்றும் கேள்விப்படவில்லை இதுவரையில்.

மா. உம்!—அவன் இறந்து போயாவது இருக்கவேண்டும். அல்லது யுத்தத்தில் மடிந்தாவது இருக்கவேண்டும்—ஏனென்றால், அவன் இந்நாட்டில் உயிரோடிருந்தால், எப்படியாவது இதுவரையில், அவன் எங்களைக் கூப்பிடுகிற வழக்கப்படி—தன் அப்பாவும் அம்மாவுமான—எங்களைப் பார்க்க வந்திருப்பான். அவன் என்னவாயினனோ வென்று எத்தனை ராத்திரி நான் கவலைப்பட்டு தூக்கம் வராமல் கஷ்டப்பட்டேன்.

[கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்.]

ஹ. [பரமநாதனிடம் ஒருபுறமாக] இனி என்னால் பொறுக்கமுடியாது.

ப. [அவனிடம் ஒருபுறமாக] கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள் இன்னும்—ஐயா, நீங்களிருவரும் எங்களுக்குக் காட்டிய அன்பிற்காக, உங்களுக்கு சந்தோஷத்தைத் தரத்தக்க ஒரு சமாசாரம் சொல்கிறேன்—இந்த ஹரிபக்த வம்சத்திலுதித்த, கடைசி பிள்ளை—ஹரிபக்தனை-அவனை ஹரி, என்று சுருக்கிக் கூப்பிடுவார்கள்—

மா. ஆம் ஆம் அதுதான் அவன் பெயர்—என் சின்ன ஹரி!-அவனைப்பற்றி என்ன சமாசாரம் ஐயா?—அவன் உயிரோடிருக்கிறானா?

ஞா. அந்த பெரிய மனுஷ்யர் பேசட்டும் மாரி.

ப. ஹரிபக்தர் உயிருடனிருக்கிறார். இப்போது ராஜாங்கத்தில் கடற்படையில் உத்தியோகம் செய்கிறார்—அவரைவிட சிறந்த போர்வீரன் அப்படையிலே கிடையாது.

ஞா. நீங்கள் எங்களுக்கு வேடிக்கையாகச் சொல்கிறீர்களா என்ன?

ப. அப்படியொன்றுமில்லை, சத்தியமாக.

மா. ஹா! ஈசன் கருணை! ஈசன் கருணை—அவனை நான் ஒரு முறை பார்க்கக் கூடுமாயின்!

ஞா. ஆம், அவனை—நான் இறப்பதற்குமுன் ஒரு முறையாவது பார்க்க வேண்டுமென்பதுதான் என் கோரிக்கை.

ஹ. இதோ இருக்கிறான் அவன்! இதோ இருக்கிறான் அவன்! என்னைக் காத்து ரட்சித்த புண்யாத்மாக்களே!—இதோ நான்தான் அவன்! நீங்கள் செய்த நன்றிக்கெல்லாம் ஏதாவது பிரதியுபகாரம் செய்ய வந்திருக்கிறேன்.

[மாரியம்மாள் பாதத்தில் பணிகிறான்.]

மா. [அவனை வாரி எடுத்து] ஹா!—இந்த பெரிய மனுஷ்யரா—என் ஹரி?—ஆம் ஆம்! சந்தேகமில்லை!—எனக்குத் தெரிகிறது நன்றாய்—இப்பொழுது!

ஞா. ஐயோ! என் பாழுங்கண்கள்!—ஆயினும் அக்குரல் எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது.

[தன் கையை நீட்ட, ஹரிபக்தன் அதனைக்கெட்டியாகப் பற்றுகிறான்.]

ஹ. அப்பா!—நான் உங்களைப் பார்ப்பதுபோல்—நீங்கள் என்னைப் பார்க்கக் கூடுமாயின்!

ஞா. பெரிதல்ல!—இதுவே போதும்—நீர்தான் அவன்?—என் மனம் பரிபூரணமாகி விட்டது.

மா. இன்றைக்கு நான் எழுந்தவேளை நல்லவேளை! நல்ல வேளை!

ஹ. உங்களை நான் எப்பொழுதாவது மறந்து போவேன் என்று நினைத்தீர்களா?

ஞா. இல்லை இல்லை! உன் சுபாவம் எனக்கு நன்றாய்த் தெரியுமே! ஆயினும் நீ எங்களை வீட்டுப்பிரிந்து எத்தனை காலமாச்சுது!

மா. இந்தப் பெரும் பொங்கல் வந்தால் பதினைந்து வருஷமாகும்.

ஹ. அன்று உங்களை விட்டுப் பிரிந்தபிறகு, இந்நாட்டில் முதன்முறை நான் கால் எடுத்துவைத்தது மூன்று தினங்களுக்கு முன்பாக!

ஞா. இதற்குள்ளாக நீ எங்களைப் பார்க்கவந்தது எங்கள் அதிர்ஷ்டம்.

மா. ஏனப்பா! நீ யெவ்வளவு பெரியவனாய் வளர்ந்துவிட்டாய்! —இருந்தாலும் சிறுவயதி லிருந்த புன்சிரிப்பு, உன் முகத்தைவிட்டு அகலவில்லை இன்னும்!

ஞா. ஐயோ! நான் நன்றாய்ப் பார்க்க முடியவில்லையே!—ஆயி னும் அது பெரிதல்ல - இதோ இருக்கிறான் நமது குழந்தை—அவனது கையை நான் பிடித்துக் கொண் டிருக்கிறேன். இது போதுமெனக்கு-யாரோ உன்னுடன் ஒருவர் வந்தாரே—அவர் எங்கே?

ப. இதோ இருக்கிறேன்—நீங்கள் எல்லாம் இப்படி சந்தோ ஷமாய்ச் சந்தித்ததைக்கண்டு அடங்காத சந்தோஷ முடையவனாய்.

ஹ. பல வருஷங்களாக என்னைவிட்டுப் பிரியாத ஆப்தன் இவர்; உங்களிருவருக்கும் நான் எவ்வளவு கடமைப்பட் டிருக்கிறேனோ அப்படியே இவருக்கும் கடமைப்பட் டிருக்கிறேன்.

மா. அப்படியா—மிகவும் சந்தோஷம். அவருக்கு ஸ்வாமி எல் லாச் செல்வங்களும் கொடுத்து ரட்சிப்பாராக!

ஹ. நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டீர்களென்று கேள்விப் பட்டு நான் மிகவும் துக்கப்பட்டேன்; ஆயினும் அதெல் லாம் இனி போச்சுது. இனி நீங்கள் தொழிற்சாலைக்குப் போவதைப் பற்றி கனவிலும் கருதவேண்டாம்.

ஞா. ஸ்வாமி உன்னை ரட்சிப்பாராக!—இனி எனக்கு துக்க மென்பதில்லை—ஆயினும் நாங்கள் உனக்குப் பாரமா யிருக்கலாகாது.

ஹ. அதெல்லாம் ஒன்றுமில்லை, அதைப்பற்றி கவலைவேண் டாம். என்னிடத்தில் ஒரே ஒரு ரூபாய் இருந்தாலும், உங்களுக்கு நான் அதில் பாதி கொடுக்க வேண்டியவன். உலகத்தில் எனக்கு உதவ ஒருவரும் இல்லாதபொழுது, நீங்களிருவரும் என்னைக் காப்பாற்றவில்லையா! என் தாய் தந்தையர்கள் மடிந்தபோது, நீங்கள் என்னை உங்கள்

குழந்தைகளில் ஒருவனைகப் பாவிக்கவில்லையா ? இப்பொழுது உங்கள் முதிர் வயதில் உங்களுக்கு உதவாமற் போவேனு நான் ! — ஒரு போதும் இல்லை.

மா. ஆம் ஆம் — இளவயது முதல் உனக்கு இந்த நல்ல சுபாவம் இருந்தது. எப்பொழுதாவது நம்முடைய சின்ன ஹறி நமக்கு உதவுவான் என்று நான் அப்போதே நினைத்ததுண்டு.

ஹ. வெயிலும் மழையும் உள்ளே நுழையக்கூடிய இக்குடிசையை விட்டு நீங்கள் உடனே புறப்படவேண்டும். இந்த ஊரிலாவது அல்லது வேறெங்காவது, உங்களுக்கு நான் ஒரு நல்ல வீடு சம்பாதித்துக் கொடுக்கிறேன்.

ஞா. அப்பா, நான் இந்த ஊரிலேயே என்காலத்தைக் கழிக்க விரும்புகிறேன். இதிலேதான் நான் பிறந்துவளர்ந்தேன், இதிலேயே நான் என் பிராணனை விடவேண்டும். வேறு வீடு பார்ப்பதென்றல், இந்த ஊரில் பழய தச்சன் இருந்த வீடு காலியாயிருக்கிறதாம் — அது ஒரு வேளை கொஞ்சம் விலை யதிகமாயிருக்குமோ என்னவோ ?

ஹ. அதைப்பற்றி உங்களுக்கு கவலை வேண்டாம் — எந்த வீட்டைச் சொல்கிறீர்கள் ? அந்த களத்து மேட்டின் பக்கத்திலே யிருக்கிறதே அதுதானே ? — அதுதான் உங்களுக்குச் சரியான இடம்—அது எனக்கு நன்றய் ஞாபக மிருக்கிறது ; நாளைக்கே நீங்கள் அங்குபோக ஏற்பாடு செய்கிறேன் நான்.

மா. நான் கோரியதற்கும் — பிரார்த்தித்ததற்கும்—மேலாக இருக்கிறது.

ஹ. அதன் பக்கத்தில் ஒரு சிறு மனை வாங்கித்தருகிறேன். அதில் நீங்கள் ஒரு பசுவை மேயவிட்டு வளர்க்கலாம். ஒரு சின்னவேலையாள் பெண்ணை ஏற்படுத்துகிறேன் ; அவள் அதன் பாலைக்கறக்கவும் ; உங்களுக்கு வேலை செய்யவும் உதவுவாள். அந்நிலத்தில் ஒரு புறம், கீழ் பயிர் ஏதாவது போட்டு, உங்களுக்கு வேண்டிய காய்

கறிகளை நீங்கள் உண்டாக்கிக் கொள்ளலாம் — வீட்டின் பின்புறம், கோழி முதலியவைகளை நீங்கள் வளர்க்கலாம் — அந்த வீட்டிற்கு சில தட்டுமுட்டு சாமான்களையும் வாங்கித் தருகிறேன்.

ஞா. ஹா! நீங்கள் செய்வது — நிரம்ப அதிகம் — நிரம்ப அதிகம்!

மா. இதென்ன இது! இவ்வளவு நன்மையையும் எங்களுக்கு வரும்பொழுது நான் ஏன் கண்ணீர் விடுகிறேன்!

ஹ. அந்த வீட்டுக்குச் சொந்தக்காரன் யார்?

ஞா. இதோ எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் — நெல்வேலியப்பர்.

ஹ. அவரை எனக்கு ஞாபகமிருக்கிறது. அவரிடம் இதோ போய் பேசி முடிவு செய்துகொண்டு வருகிறேன் எல்லாவற்றையும். வா, அப்பா பரமநாதா—நான் வருகிறேன் —அப்பா! — அம்மா! [இருவரும் போகிறார்கள்.]

ஞா. அப்பா! ஸ்வாமிதான் உனக்கு கைம்மாறு செய்யவேண்டும்!

மா. நான் எழுந்தவேளை நல்லவேளை! நல்லவேளை! —நாம் ஈசனைத் துதிப்போம்!

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றிற்று.

பெண்புத்தி கூர்மை

நாடக பாத்திரங்கள்

சிவராம முதலியார், பாலாம்பாள், பாலகிருஷ்ணன் ஞானம்பாள்.

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்—பெங்களூரில் லால்பாக்கை அடுத்த ஒரு பங்களாவில் ஓர் அறை. சிவராம முதலியாரும், பாலாம்பாளும் உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்.

சி, என்ன பாலு, உன் யுக்தி எப்படி முடியுமோ வென்று எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

பாலா. எனக்கென்னமோ சந்தேகமே யில்லை !

சி. பார்க்கலாம்—எனக்கு பயமாகத்தானிருக்கிறது. பிள்ளை யார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்தால் !—அவர்களிரு வரும் சந்தித்தால் — உன் ரகசியம் வெளியானால் — சச் சரவுதான் இட்டுக் கொள்வார்களென்று தோன்று கிறது.

பாலா. முதலில் சச்சரவிட்டுக் கொண்டாலும்—பிறகு—சமா தானமாய்ப் போய் விடுவார்கள்.

சி. அப்புறம் கலியாணம் செய்து கொள்வார்களோ ?

பாலா. அப்படித்தான் நடக்குமென்று பிரார்த்திக்கிறேன் — நம்புகிறேன் — என்ன பந்தயம் ?

சி. அப்படி நடந்தால் உனக்கு என்ன வேண்டுமென்றாலும் தருகிறேன்.

பாலா. ஆ ! நான் சொன்னபடி நேரிட்டால் — காலை புடை வைக்காரன் கொண்டு வந்தானே, அந்த நூறுரூபாய்

புடைவை எனக்கு வாங்கித் தரவேண்டும்—நான் அந்த கலியாணத்திற்குக் கட்டிக் கொள்ள.

சி. அப்படி மாத்திரம் நேரிட்டால், நூறு ரூபாயல்ல இரு நூறு ரூபாய் புடைவை வாங்கித் தருகிறேன். எப்படி யாவது பரமேஸ்வரன் அருளால், அவள் தகப்பனுருக்கு நான் வாக்களித்தபடி இவர்களுக்கு கலியாணம் செய்து வைத்தால் போதும் — என்ன நாலுமணியாயும் பால கிருஷ்ணன் வரவில்லை – சரியாக மணிப்பிரகாரம் வந்து விடுவான் என்றுயே !

பாலா. இன்னும் நாலு அடிக்கவில்லையே !

[கடியாரம் நான்கு அடிக்கிறது]

சி. இதோ அடிக்கிறது ! [வெளியில் பைசிகல் சத்தம்]

பாலா. இதோ வருகிறுன் !

(பாலகிருஷ்ணன் வருகிறுன்.)

சி. உட்கார் பாலகிருஷ்ணு — கோலாரில் எல்லோரும் க்ஷேமம் தானே.

பா. க்ஷேமம்தான்.

பாலா. ஏனப்பா—காகிதம் போட்டால் பதில் போட கூட உனக்கு சவகாசமில்லையோ ?

பா. அக்காள், அந்த காகிதத்திற்கு என்ன பதில் போடு கிறது ? நான்தான் உனக்கு பலதரம் சொல்லியிருக்கி றேனே, அந்த மைசூர் காலேஜில் படிக்கும் ஞானம்பா ளைக் கலியாணம் பண்ணிக் கொள்ளுகிற விஷயத்தைத் தவிர மற்ற எந்த சமாசாரமென்றுலும் கேள், பதில் சொல்லுகிறேன்.

பாலா. அந்த பெண்விஷயத்தைப் பற்றியா நான் கடைசி கடி தத்தில் எழுதியிருந்தேன் ? — அவள் சமாசாரம்தான் அப்பொழுதே முடிவாகி விட்டதே. இப்பொழுது நீ அவளைக்கலியாணம் பண்ணிக்கொள்ள விரும்பினுலும் அது முடியாது.

பா. அப்பா !— ஏன் அப்படி ?

பாலா. அவள் சீமைக்குப் புறபபட்டு விட்டாளாம், இன்னும் அங்கே போய் வயித்தியப் பரீட்சைக்குப் படிக்கவேண்டு மென்று.

பா. சரிதான்! — நான் நினைத்தபடியே ஆச்சுது; பெண்களுக்கு எவ்வளவு கற்பிக்க வேண்டுமோ, அதற்கு அதிகமாகக் கற்பிப்பதின் பலன் இதுதான்! பீ. ஏ. பாஸ் பண்ண வைத்தால், அதற்குமேல் போக விரும்புவார்கள். அன்றியும் இப்பொழுது டெனிஸ், ஹாக்கி எல்லாம் ஆடுகிறாள். அங்கே போய் கிரிகட் கற்றுக் கொள்வாள்—ஆ! போன மாதம், மைசூர் பிசிகல் கல்ட்சர் (Physical Culture) பத்திரிகையில், அவளுக்கு நீஞ்சல் அடிப்பதில் பரிசு கிடைத்ததாகப் படித்தேன் — பெண்கள் நீந்தக் கற்றுக் கொள்வதாவது! — அதிருக்கட்டும், அவள் சீமைக்குப் போய்விட்டதாக யார் சொன்னது?

பாலா. அவள் பக்கத்து வீட்டுப்பெண்-மைசூரிலிருந்து ஒருத்தி வந்திருக்கிறாள் நம்முடைய வீட்டிற்கு — தன்தேகசௌக்கியத்திற்காக—ஏதோ உன் அத்தானை கன்சல்ட் (Consult) பண்ண — அவள் சொன்னாள்.

பா. சந்தோஷம் — ஞானம்பாள் அப்படியே சீமையிலிருந்து இங்கு திரும்பிவராமல்—அங்கேயே யாரையாவது கலியாணம் பண்ணிக்கொள்ளச் சொல்.

[வெளியில் மோட்டார் சப்தம்.]

அத்தான்—உங்கள் கார் சப்தம் அல்லவா அது?

சி. ஆம், அந்த மைசூர்—பெண்ணை—அதில் டிரைவுக்கு — லால்பாக்குக்கு — அனுப்பினேன்.

லோகாம்பாள் வருகிறாள்.

பாலா. வா அம்மா – உட்கார் – என் நிற்கிறாய்?–இவர் வேறு யாருமில்லை உன்சிநேகிதி —ஞானம்பாள் -- உறவுதான்-

லோ. நமஸ்காரம்.

பா. உட்காருங்கள் — உடம்பு சௌக்கியம் தானே? — இவர்களுக்கு உடம்பு என்னவென்று சொன்னீர்கள் அத்தான்?

சி. உம் — ஒன்றுமில்லை அங்கத்தி — வைத்தியர், என்னமோ கொஞ்சம்—இரும்பலைக்கண்டு பயந்து, பெங்களூருக்கு என் இன்ஸ்டிட்யூட்டு (Institute) க்கு அனுப்பிவிட்டார் — இரண்டு நாளில் இந்த இருமல் நின்றுவிடும்.

பா. மிகவும் சந்தோஷம்—குழந்தை ஏதாவது படித்திருக்கிறதா ?

லோ. எஸ்—எல்—சி—சி. பாஸ் பண்ணியிருக்கிறேன்.

பா. நிரம்ப சந்தோஷம்—அவ்வளவு போதும்—இன்னும் எதற்கு படிப்பு? அதுவும் உடம்பு அசௌக்கியமாயிருக்கும்போது?

லோ. இனிமேல் படிப்பை—நிறுத்திவிட்டேன்.

பா. நிரம்ப புத்திசாலியம்மா நீ—அந்த ஞானம்பாளைப் போல் இல்லாமல்—உன் சிநேகிதி சீமைக்குப் போயிருக்கிருளாமே!—ஐ. சி, எஸ் பாஸ் பண்ணுவதற்கும், கிரிக்கெட் ஆடக் கற்றுக்கொள்வதற்கும்! [எல்லோரும் நகைக்கின்றனர்.] நீ ஏதாவது ஆடக் கற்றுக்கொண்டாயா அம்மா?

லோ. நான் பாட்மின்டன்—ஆடக் கற்றுக்கொண்டேன்.

பா. அதுதான் சரி—அதுதான் பெண்கள் ஆடவேண்டிய ஆட்டம். நீ நிரம்ப புத்திசாலியம்மா—ஸ்திரீகள் கிரிக்கெட் புட்பால் (Foot-ball) முதலிய ஆட்டங்கள் எல்லாம் ஆடக்கூடாது என்று நான் பெங்களூர் பத்திரிகையில் எழுதியதை நீ படித்திருக்கிருயா ?

லோ. படித்திருக்கிறேன்—ஞானம்பாள் எனக்கு காண்பித்தாள்—தான் அதற்குப் பதில் எழுதியதையும் காண்பித்தாள்.

பா, செய்திருப்பாள்—அந்த அதனப்பிரசங்கி?—உன் சிநேகிதியை தூஷிக்கிறேன் என்று நீ கோபித்துக்கொள்ளாதே—அதிருக்கட்டும்—நாங்கள் இருவர்களும் எழுதியதில், யார் எழுதியது சரியென்று உனக்கு—தோணுகிறது.

லோ. சில விஷயங்களில் நீங்கள் எழுதியது சரியென்று தோணுகிறது.

பா. மிகவும் சந்தோஷம்.

லோ. சில விஷயங்களில்—அவள் எழுதியதும் சரியென்று தோணுகிறது.

பா. அது என்ன அது?—அவை என்னவென்று சொல் பார்ப்போம்; அதற்கெல்லாம் நான் சமாதானம் சொல்லுகிறேன்.

பாலா. சரி சரி! நீங்கள் இந்த வாக்குவாதம் ஆரம்பித்தால் இன்றைக்கெல்லாம் முடியாது, நான் சொல்கிறதைக் கேளுங்கள். முன்பு டீ (Tea) சாப்பிட வாருங்கள்—அப்புறம்—உங்கள் வாக்குவாதங்களை ஆரம்பிக்கலாம்.

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்—தோட்டத்தில் நடைவாபி.

நடைவாபியின் சுவற்றின்மீது பாலகிருஷ்ணனும்
லோகாம்பாளும் உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்.
கீழே பாலாம்பாளும், சிவராம முதலியாரும் உட்கார்ந்து
கொண்டிருக்கின்றனர்.

பா. நீ என்னதான் சொல், தேகபலம், தைரியம், வீரம் முதலிய குணங்களில் எத்தனை யுகங்கள் கழிந்தாலும் பெண்கள் ஆடவர்களுக்குச் சமான மாகமாட்டார்கள்.

லோ. யுகங்கள் கழிவானேன்? இதற்கு பல வருடங்களுக்கு முன்பே நமது நாட்டிலேயே ரஜபுத்ர ஸ்திரீகள், கவசம் பூண்டு சண்டைக்குச் சென்றதை மறந்து பேசுகிறீர்களே! சாந்த்பீபி முதலிய மகம்மதிய ஸ்திரீகள்கூட அப்படிச் செய்யவில்லையா?—தற்காலமும் துர்க்கி ஸ்திரீகளும் ஜப்பானிய ஸ்திரீகளும் யுத்தப் பயிற்சி பெற்று வருவதை நீர் கேட்டதில்லையா? நம்முடைய தேசத்து ஸ்திரீகளுக்கும், ஆடவர்களுக்குக் கொடுப்பதுபோல் அப்பயிற்சிகள் கொடுக்கட்டும், அவர்களுக்கும் தைரியம், வீரம் எல்லாம் எப்படி இல்லாமற் போகிறதோ பார்ப்போம்.

பா. அப்படியானால் ஆண்மக்கள் என்றும் பெண்டிர் என்றும் இருவகையாக ஏன் ஸ்வாமி சிருஷ்டித்தார்?

பாலா. உங்களைப்போல் என்நேரமும் சச்சரவிட்டுக் கொண்டிருக்கும் பொருட்டு! [எல்லோரும் நகைக்கின்றனர்.]

பா. நகைப்பு ஒருபுறம் இருக்கட்டும்—அக்காள். நீதான் சொல். என் மதம் என்னவென்றால், ஆண்பெண் என்று

இரண்டு பிரிவாக பரமேஸ்வரன் சிருஷ்டித்தபடியால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் இவ்வுலகில் இன்னின்ன வேலையென்று பிரித்திருக்கிறது, என்பது,

லோ. என் அபிப்பிராயம் என்னவென்ருல், சிருஷ்டியில் இரண்டு பிரிவாக்கப்பட்டிருந்தாலும் குணதிசயங்களில் வித்தியாசமில்லை என்பது,

பாலா. இந்த உங்கள் சண்டையை யார் தீர்ப்பது?

பா. ஏன்? நீங்களும் அத்தானும்—எங்கள் வாக்குவாதத்தை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தீர்களே, நீங்கள்தான் தீர்மானம் சொல்லுங்கள்.

பாலா. நீங்கள் இரண்டு பெயரும் கூறுவது சரியென்று தோன்றுகிறது எனக்கு. [நகைக்கிருர்கள்.]

சி. எனக்கு என்ன தோன்றுகிற தென்ருல்—லோகாம்பாள் பேசும்பொழுது அது சொல்வதுதான் சரியென்று தோணுகிறது; நீ பேசும்பொழுது நீ சொல்வது சரி யென்று தோன்றுகிறது.

பா. இது என்ன அத்தான் கோமுட்டி தீர்மானமாயிருக்கிறது! [அனைவரும் நகைக்கின்றனர்]

பாலா. எங்களால் உங்கள் சண்டையைத் தீர்க்க முடியாதம்மா—நாங்கள் காப்பி சாப்பிடப்போகிருேம்—நீங்கள் வருகிறீர்களா இல்லையா? சீக்கிரம் வராவிட்டால், காலை லோகாம்பாள் செய்த மைசூர்பாக்கை யெல்லாம் தீர்த்துவிடுவோம்.

பா. ஏ ஏ! இதோ நாங்களும் வந்து விட்டோம். எங்களுக்கும் கொஞ்சம் வைத்துவையுங்கள்.

பாலா. ஆனுல் சீக்கிரம் உங்கள் சண்டையை முடித்துக் கொண்டு வாருங்கள்.

சி. இன்னும் சண்டை போட வேண்டுமென்ருல், அந்த சுவற்றை விட்டிறங்கி சண்டை போடுங்கள். இல்லாவிட்டால், கிணற்றுக்குள்தான் விழுவீர்கள்;

பா. நாங்கள் விழமாட்டோம்.

லோ. விழுந்தாலும் தப்பித்துக் கொள்வோம்!

[சிவராம முதலியாரும் பாலாம்பாளும் போகிறார்கள்.]

பா. லோகாம்பாள்! காலையில் நாம் சாப்பிட்ட மைசூர்பாக் நீ செய்ததா? மிகவும் நன்றாய் இருந்ததே, உனக்கு இது யார் கற்பித்தது?

லோ. யாரா? எங்கள் பள்ளிக்கூடத்தில் எல்லாம் கற்பிக்கிறார்கள். சமயல்வேலை, தையல்வேலை, சங்கீதம், கோலம் போடுதல், எல்லாம் கற்றுக் கொடுக்கிறார்கள்.

பா. மிகவும் சந்தோஷம்! ஆனால் ஏதோ ஒரு பாட்டு பாடு கேட்போம். [லோகாம்பாள் பாடுகிறாள்.] பேஷ்! பேஷ்!

[கை தட்டும் பொழுது நழுவி கிழே கிணற்றில் விழுந்து விடுகிறான்.]

ஹா! ஹா! லோகாம்பாள்! லோகாம்பாள்! எனக்கு நீந்தத் தெரியாது! தெரியாது—

லோ. பயப்படாதீர்! இதோ காப்பாற்றுகிறேன்!

[கிணற்றில் குதித்து கரையேற்றுகிறாள்.]

ஐயோ! தலையில் காயம் பட்டிருக்கிறது. இந்த ரத்தத்தை கட்டுகிறேன்.

[தன் முன்தானையின் ஒரு துண்டை கிழித்துக் கட்டுகிறாள்.]

சிவராம முதலியாரும், பாலாம்பாளும் ஓடி வருகிறார்கள்.

சி. நினைத்தேன்! நினைத்தேன்!—நினைத்தபடி ஆயிற்று! லோகாம்பாள், அம்மட்டும் ரத்தம் வழியாதபடி காயத்தைக் கட்டினையே சரியாக!—நீ போய் உன் இரத்தத் துணியை, மாற்றிக் கொள். பாலு, இட்டுக்கொண்டு போ லோகாம்பாளை உடனே வீட்டுக்குள்—நீஞ்சத் தெரியாத இந்த ஆண்பிள்ளையை நான் அழைத்துக் கொண்டு வருகிறேன். வாடா அப்பா, ஈரத் துணியுடன் இராதே, அப்புறம் நிமோனியா (Pneumonia) வரப் போகிறது. [அழைத்துக்கொண்டு போகிறார்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி

இடம்:—டாக்டர் சிவராம முதலியார் வீட்டில் ஓர் அறை.

காலம்—காலை.

பாலகிருஷ்ணன் படுக்கையில் படுத்தவண்ணம் இருக்கிறான். சிவராம முதலியார் அவன் பக்கலில் நிற்கிறார். பாலாம்பாள் அருகில் நிற்கிறாள்.

சி. பாலகிருஷ்ணா, இனி ஒன்றும் பயமில்லை. இனிமேலாவது ஜாக்கிரதையாயிரு, கிணற்றின் ஆழம் பார்க்காதே! நீ தப்பிப் பிழைத்தது தெய்வாதீனம்? அம்மட்டும் அந்தப் பெண்—லோகாம்பாள்—உடனே கிணற்றில் குதித்து உன்னைக் காப்பாற்றியிராவிட்டால்—இன்றைக்கு ஒரு வருக்கு சஞ்சயனம் நடத்தியிருக்க வேண்டி வந்திருக்கும். அன்றியும் தலையில் பட்ட காயத்தை உடனே பர்ஸ்டு எய்ட் (first aid) கொடுத்து கட்டியிராவிட்டால், உன் உயிருக்கே அபாயம் நேர்ந்திருக்கும். உன் உயிரை அவள் தான் காப்பாற்றினாள் இருவிதத்திலும். ஆகவே அவளுக்கு நீ மிகவும் நன்றியறிதல் பாராட்ட வேண்டும்.

பா. ஆமாம் அத்தான்—நான் போய் வந்தனம் சொல்லி விட்டு வருகிறேன்.

சி. அடடெ! எழுந்திருக்காதே! முட்டாள், நிரம்ப படித்தவன் தான்!—இது கூடவா தெரியாது? இந்த ரணம் ஆறி இக்கட்டை நான் அவிழ்க்கிறவரையில் படுக்கையை விட்டு நீ எழுந்திருக்ககூடாது—பாலு, நான் உத்திரவு கொடுக்கும் வரையில் இவனைப் படுக்கையை விட்டு எழுந்திருக்கவிடாதே—நான் வருகிறேன். [போகிறார்.]

பா. அக்காள், அப்பெண்ணுக்கு—லோகாம்பாளுக்கு—என் உயிரைக் காப்பாற்றியதற்காக—நான் வந்தனம் செலுத்தவேண்டுமே!—

பாலா. அதை நான், நீ சொன்னதாகச் சொல்லிவிடுகிறேன்.

பா. நீ—அவளை—இங்கு கொஞ்சம், அழைத்துவாயேன்—நான் என் வாயால்—சொன்னால்—எனக்கு திர்ப்தியாயிருக்கும்.

பாலா. நான் சொன்னால் உதவாதோ?—நீ நேராகச் சொல்ல வேண்டுமோ? அவள் மைசூருக்குத் திரும்பிப் போக வேண்டுமென்று சாமான்களையெல்லாம் கட்டிக்கொண்டிருக்கிறாள்.

பா. இன்றைக்கேயா?—அக்காள், நீங்கள் சொல்லி இன்னும் இரண்டு மூன்று நாட்கள் இருந்து போகச் சொல்லுங்களேன்;

பாலா. ஏன்? ஏன் அப்படி அவகாசம்?

பா. அக்காள்—உன்னிடம் சொல்ல எனக்கு வெட்கமென்ன—நான்—கலியாணம் செய்துகொள்ள விரும்புகிறேன்.

பாலா. யாரை?

பா. லோகாம்பாளை.

பாலா. அப்புறம் உன் தகப்பனார் வாக்கு என்னமாய்ப் போகிறது?

பா. அக்காள், நீ என்ன சொன்னாலும் சொல்—நான் கல்யாணம் பண்ணிக் கொள்வதானால் அப்பெண்ணைத்தான் கலியாணம் பண்ணிக்கொள்வேன்; இல்லாவிட்டால் இப்படியே பிரம்மசாரியாயிருந்து விடப்போகிறேன்.

பாலா. அதையெல்லாம் அப்புறம் யோசிக்கலாம்—நீ அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ள இஷ்டப்பட்டால், அவள் அதற்கு சம்மதிக்க வேண்டுமே?

பா. நீ மெல்ல அவள் மனதை—ரகசியமாக—அறிந்து பாரேன்.

பாலா. நல்ல வேலைதான் எனக்கு! அதெல்லாம் முடியாது—நீ வேண்டுமென்றால் நேராகக் கேட்டுக்கொள்—போகுமுன் உன்னிடம் சொல்லிவிட்டுப் போக வேண்டுமென்றாள்—அதற்காக உன்னிடம் அனுப்புகிறேன். அப்புறம்—உன் அதிர்ஷ்டம். [போகிறாள்.]

பா. மல்லேஸ்வரர் விட்ட கதியாகிறது!—தன் உயிரையும் பாராமல் என் உயிரைக் காப்பாற்றினாள்—உடனே கிணற்றில் குதித்து!—ஆகவே என்மீது—ஏதாவது கொஞ்சம்—அன்பிருக்கும்—இரக்கமாவது இருக்கும்!

லோகாம்பாளை அழைத்துக்கொண்டு பாலாம்பாள் வருகிறாள்.

பாலா. பாலகிருஷ்ணா, இதோ லோகாம்பாள்—வந்திருக்கிறாள்—இன்றைக்கு மைசூருக்குப் போகவேண்டுமாம்,

உன்னிடம் சொல்லிவிட்டுப் போக வந்திருக்கிறுள்—இதோ நான் வந்துவிட்டேன்; உங்கள் அத்தான் அந்த மருந்தை வாங்கி வைக்கச் சொன்னுர் தான் திரும்பி வருமுன். [போகிறுள்.]

பா. லோகாம்பாள்—உட்கார்—இன்றைக்கே மைசூருக்குப் போகவேணுமா? இன்னும் இரண்டு மூன்று நாட்கள் பொறுத்துப் போகலாகாதா?

ஞா. உங்கள் அத்தான், டாக்டரைக் கேட்டேன், இனி ஒரு அபாயமுமில்லை என்று சொன்னுர்—ஆகவே இன்றைக்கு புறப்பட உத்தரவு கொடுங்கள்.

பா. நான் மாட்டேன்—என் உயிரை இரண்டு விதத்தில் காப்பாற்றிணுய் அதற்காக—நான் உனக்கு கைம்மாறு செய்ய வேண்டாமா?—தக்கபடி.

ஞா. என் கடமையைச் செய்தேன், அதற்கு கைம்மாறு என்னத்திற்கு?

பா. லோகாம்பாள்—என் உயிரை இன்னெரு விதத்திலும் காப்பாற்றும்படியாக வேண்டுகிறேன். என் உயிர் உன் கையில் இருக்கிறது!—அதை நீ எப்படியாவது காப்பாற்றவேண்டும்—அதற்குமேல் நான் சொல்வதற்கில்லை—உன் இஷ்டம்.

ஞா. என்னிஷ்டமா?—என் இஷ்டப்படி செய்கிறீரா?

பா. சொல், அப்படியே செய்கிறேன்—எதுவாயிருந்தபோதிலும்.

ஞா. சத்தியமாக?—

பா. ஆம் சத்தியமாக.

ஞா. ஆனுல்—உங்கள் மாமா மகள்—ஞானும்பாளைக் கலியாணம் செய்துகொள்வதாக வாக்களியும்.

பா. நான் மாட்டேன்!

ஞா. இது நியாயமா? நான் சொல்லுகிறபடி செய்வதாகச் சத்தியம் செய்துவிட்டுத் தவறலாமா?—ஞானும்பாள் எழுதியது வாஸ்தவம் தான்—ஆடவரை எப்பொழுதும் நம்பலாகாதென்று.

பா. பெண்களை மாத்திரம் நம்பலாமோ? நான் உன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ள விரும்பினுல், நீ மற்றொருத்தியைக் கலியாணம் செய்து கொள்ளும்படி என்னைக் கேட்கிறுயே!

ஞா. மற்றவர்களை நம்பலாமோ என்னமோ எனக்குத் தெரியாது, நீங்கள்—என்னை நம்பலாம். நீங்கள் மாத்திரம்—ஞானம்பாளைக் கலியாணம் செய்துகொள்ளுங்கள்—நான் உடனே உம்மைக் கலியாணம் செய்துகொள்ளுகிறேன்.

பா. சத்தியமாகவா?

ஞா. ஆம் சத்தியமாக.

பா. எப்படியாவது நீ எனக்குக் கிடைத்தால் போதும்!—அப்படியே ஆகட்டும்.

ஞா. ஆனால் கொஞ்சம் பொறுங்கள்—அவளை இங்கே அனுப்புகிறேன்?

பா. எங்கே இருக்கிருள்—அந்த ஞானம்பாள்?

ஞா. பக்கத்து வீட்டில்தான் தங்கி யிருக்கிருள்—என்னுடன் நான் வரும்போது என்னுடன் வந்தாள்—அவள் உம் மீது மிகவும் காதல் கொண்டிருக்கிருள். உம்மையே கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்றிருக்கிருள்—அவள் உம்முடைய மனதை மெல்ல அறியும்படி சொன்னுள்—என்னிடம் இதோ நான் உங்கள் அக்காளுடன் அவளை அனுப்புகிறேன். (போகிருள்)

பா. இதென்னடா கஷ்டமாய் முடிந்தது! கலியாணமே வேண்டாமென்றிருந்ததற்கு, ஒரு தாரத்திற்கு இரண்டு தாரமா?—அப்புறம் என் பிரம்மச்சாரி சபதம் எப்படிப் போவது!

பாலாம்பாள் ஞானம்பாளுடன் வருகிருள்.

பாலா, பாலகிருஷ்ணு—ஏன் முகத்தைத் திருப்பிக்கொண்டாய்? இப்படித் தான் கொஞ்சம் திரும்பி பாரேன்—ஞானம்பாளை!

ஞா. ஞானம்பாள் மீது அவருக்கு நிரம்ப கோபம்; திரும்பி அவள் முகத்தைக் கூடப் பார்க்க இஷ்டமில்லை.

பா. யாரது? [திரும்பி] எதோ ஞானம்பாள்?

பாலா. முண்டம்!—இன்னும் தெரியவில்லையா?—நீ கலியாணம் பண்ணிக் கொள்ள விரும்பும் லோகாம்பாள் தான். நீ கண்ணெடுத்து பாரேனென்று கூறிய ஞானம்பாள்!

பா. ஆ!—அப்படியா!—ஞானம்பாள்!—

(திரை விழுகிறது)

நாடகம் முற்றியது.

ஜமீன்தார் வரவு

நாடக பாத்திரங்கள்

ஜமீந்தார், பொட்டியம்மாள், குழந்தைகள்,
கன்னியம்மாள், ஞானசுந்தரம், தம்பியப்பன்.

முதற் காட்சி

இடம்:—ஒரு சிறு வீட்டில் ஓர் அறை
பொட்டியம்மாள் கைராட்டினம் சுற்றிக்கொண்டிருக்கிருள்.
கன்னியம்மாள் கறிகாய் நறுக்கிக் கொண்டிருக்கிருள்.
ஆறு குழந்தைகள் வெவ்வேறு வேலை செய்து கொண்டிருக்கின்றன. ஜமீன்தார் வருகிருர்.

ஜ. பொட்டியம்மா! சவுக்கியம் தானு ?

பொ. ஆ! ஜமீன்தாரய்யாவா ?—வாருங்கள்! வாருங்கள்! —ஐயா க்ஷேமம்தானே ? வீட்டிலே அம்மா—எல்லோரும் சவுக்கியமா யிருக்கிருர்களா ?

ஜ. ரொம்ப சவுக்கியமா யிருக்கிருர்கள். நீங்கள் எல்லாம் என்னமா யிருக்கிறீர்கள் ?

பொ. உங்கள் தயவால் சவுக்கியமா யிருக்கிறேம். தயவு செய்து உட்காருங்கள், இது சின்ன வீடு — இருந்தாலும் சுத்தமாய் வைத்திருக்கிறேம். இதோ இங்கு உட்காருங்கள். இந்த இடம் பெருக்கி யிருக்கிறது. கன்னி, ஜமீந்தார் அவர்களுக்கு ஒரு நாற்காலி எடுத்துப் போடு.

[அப்படியே செய்ய அதன் மீது உட்கார்ந்து கொண்டு.]

ஜ. எல்லாம் மிகவும் சுத்தமா யிருப்பதைப் பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன். உனது புருஷன் கழனி வேலை செய்கிருனே ?

பொ. ஆமாம், இரண்டு பிள்ளைகளோடு, பறம்படித்து விதை விதைக்கப் போயிருக்கிருர்.

*—8

ஜ. சந்தோஷம்—மற்றவர்கள்—இரண்டு—மூன்று—நான்கு -ஆறு இவர்கள் எல்லாம் உங்கள் குழந்தைகள் தானே— எல்லோரும் அவரவர்கள் வயத்துக்குத் தக்கபடி ஏதா வது வேலை செய்து கொண்டிருப்பதைக் காண சந்தோ ஷப் படுகிறேன்.

பொ. ஆமாம் ஜமீன்தார் அவாள்! இந்த காலத்தில் எல்லோ ரும் ஏதாவது வேலை செய்தால்தான் குடித்தனம் செய்ய முடியும். என் புருஷனும் நானும் எப்பொழுதும் வேலை செய்து வழக்கப்பட் டிருக்கிறோம்—அப்படியே எங்கள் குழந்தைகளையும் அந்த பழக்கத்தில் கொண்டு வருகி றோம். கைக் குழந்தைகள் தவிர மற்றவர்கள் ஏதாவது வேலை செய்வார்கள்.

ஜ. அதுதான் சரி. சோம்பேறித்தன மின்றி ஏதாவது சுறு சுறுப்பாய் வேலை செய்தால், எப்பொழுதும் சுகமாய் வாழலாம் — ஏழைகளாய்ப் போய் பிச்சை யெடுக்க வேண்டி வருமேயென்று பயப்பட வேண்டியதில்லை — என்ன நேரிட்டாலும்—மஹா ராஜர்களுடைய பிள்ளை கள் கூட ஏதாவது கைத் தொழில் கற்றுக்கொண்டால் மிகவும் நலமாயிருக்கும்.

பொ. மஹாராஜர்களுக்கு என்னுங்க? அவர்களுக்குத் தான் செல்வம் கையிலிருக்கிறதே. அவர்கள் வேலை செய்வா னேன்?

ஜ. பணத்தை செலவழிப்பது சுலபம், சம்பாதிப்பது தான் கஷ்டம்; கையிலிருக்கும் பணம் செலவானபின் மறுபடி யும் பணப்பையை நிரப்ப அவர்கள் ஏதாவது வேலை செய்து தானே ஆக வேண்டும்?

பொ. அது மெய்தானுங்கள். வேலை செய்ய எங்களுக்குச் சக் தியு மிருக்கிறது ஊக்கமு மிருக்கிறதென்று நாங்கள் சந் தோஷப்பட வேண்டும். அன்றியும் உங்களைப் போன்ற நல்ல ஜமீன்தார் கீழ் வாழ்கிறோமே என்று அதிக சந்தோ ஷப்பட வேண்டும்.

ஜ. நல்ல குடித்தனக்காரர்களுக்கு நல்ல ஜமீன்தார்கள் இருக்க வேண்டியது தானே—உங்களுடைய நற்குணத் தைப் பற்றி நான் நெடுநாள் அறிந்திருக்கிறேன்—வாருங்

கள் குழந்தைகளே! உங்களுக்காக ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்.

[அவர்களுக்கெல்லாம் அப்பங்கள் எடுத்து கொடுக்கிறார்.]

பொ. கன்னி, ஜமீன்தாருக்கு வந்தனம் ஏன் சொல்லா திருக்கிறாய்?

ஜ. இவ்வளவு பெரியவளான பெண் உங்களுக்கு ஒருத்தி இருப்பதாக நான் நினைக்கவில்லை.

பொ. எங்களுக்கு இவ்வளவு பெரிய பெண் உண்மையில் கிடையாது. இவள் எங்க பெண் அல்ல, ஆயினும் அவளை எங்கள் சொந்த பெண்ணைப் போலவே பாவித்து வருகிறோம்.

ஜ. உங்கள் பந்து போலும்?

பொ. இல்லை ஐயா, எங்கள் பந்து அல்ல.

ஜ. பிறகு யார்?

பொ. [ஒருபுறமாக அவரிடம்] அவள் வெளியே போன பிறகு உங்களுக்குத் தெரிவிக்கிறேன். [உறக்க] கன்னி, தொழுவத்திலே யிருக்கிற கன்றுக் குட்டிக்கு கொஞ்சம் தண்ணீர் குடிப்பி. [கன்னி போகிறாள்.]

ஜ. வாஸ்தவத்தில் நிரம்ப மரியாதையுடைய அழகிய பெண்ணாகத் தோன்றுகிறாள்.

பொ. ஆம் ஐயா! அவள் அழகுக்கேற்ற நற்குண முடையவள் இவள் ஏதோ தூரதேசத்திலிருந்து வந்த பரதேசிப் பெண்; இவள் அகஸ்மாத்தாய் இங்கு வந்து சேர்ந்தாள். எங்களுடன் ஒரு வருஷமாக வசித்து வருகிறாள். அதைப் பற்றிய விவரமெல்லாம் அறிய விரும்புவதா யிருந்தால் உங்களுக்குச் சொல்கிறேன்.

ஜ. சொல்லம்மா, அதைக் கேட்க ஆவலா யிருக்கிறேன் — முதலில்—எனக்கு சாப்பிட கொஞ்சம் மோர் கொண்டு வந்து கொடு.

பொ. ஐயோ! அதை நான் முன்பே உங்களுக்கு கொடுக்காதற்காக என்னை மன்னிக்க வேண்டும் — மாரி, அடுப்

பண்டை போய் ஐயாவுக்கு கொஞ்சம் நல்ல மோராக, ஒரு சுத்தமான பாத்திரத்தில் கொண்டுவா.

[ஒரு குழந்தை உள்ளே போய் கொஞ்சம் மோர் கொண்டு வந்து கொடுக்கிறது.]

ஜ. [அதைச் சாப்பிட்டு விட்டு] உம்—உன் கதையை இனி ஆரம்பியம்மா.

பொ. என்னவென்றால்—என் புருஷன் ஒரு நாள் சாயங்காலம் கழனியில் வேலை செய்துவிட்டுத் திரும்பி வரும் பொழுது, ஒரு கட்டை வண்டி கொஞ்சம் தூரத்தில் ஒரு புறமாக குடம் கவிழ்ந்திருப்பதைக் கண்டார். உடனே ஓடிப் போய்ப் பார்க்க, அதன் ஒரு பக்கமாக கரையோரம் மல்லாக்காய் வீழ்ந்த ஒரு கிழவி மிகுந்த காயத்துடன் விழுந்து கிடப்பதையும், அவள் பக்கத்தில் இந்த பெண் அழுதுகொண்டு உட்கார்ந்திருப்பதையும் கண்டார். — இவர்களிடம் போய் அந்த அம்மாளை கஷ்டத்துடன் வண்டியில் ஏற்றி இப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு எங்கள் வீடு வந்து சேர்ந்தார். உடனே அந்த அம்மாளுக்கு தாகத்திற்குக் கொடுத்து உபசரித்தோம். பிறகு, நாங்களிருவரும் யோசனை செய்து, வீட்டுக்குள் அவர்களை அழைத்து வந்து படுக்கையில் படுக்க வைத்தோம். அவர்கள் தலையில் பெரியகாயம் பட்டிருந்தது ஒரு வயித்தியரை வரவழைத்துக் காட்டினோம். எங்களால் ஆனமட்டும் சிகிச்சை செய்து பார்த்தோம். ஒன்றும் பிரயோஜனப் படவில்லை. சீக்கிரம் அவர்கள் உயிர் போகும் எனக் கண்டோம். இந்தப் பெண் கன்னி, பாபம், அவளுடைய பாட்டியை விட்டு இரவும் பகலும் பிரியாதிருந்தாள். அவள் அச்சமயம் அழுததைக் கேட்டிருப்பீராயின் உங்கள் மனதைக் கரைத்திருக்கும். இவளுக்கு அந்த பாட்டியைத் தவிர வேறு இவ்வுலகில் ஒருவருமில்லை என்றாள்; அந்தப் பாட்டியும் போய் விட்டால் தன் கதி என்னவாகுமென்று கதறினாள். கன்னியின் தாய் தகப்பன்மார் காலமாய் விட்டார்களாம். பிறகு தன் பாட்டியுடன் அந்தம்மாளுடைய பிறந்த

ஊருக்கு வடக்கே போய், யாராவது தங்கள் பந்துக்கள் இருக்கிறார்களா என்று விசாரித்தறிந்து, அவர்களுடன் சொல்ப சம்சாரம் பண்ணலாம் என்று புறப்பட்டார்கள்ளாம்—பிறகு கதையைச் சுருக்கிச் சொல்லுமிடத்து, கொஞ்ச நாட்களுக்குள் அந்த அம்மாள் இறந்து போனார்கள். அவர்களிடமிருந்த கொஞ்ச பணம் வயித்தியச் செலவிற்கும் சமாதி வைப்பதற்கும் சரியாகப் போச்சுது. கன்னி மிகவும் துயரத்தில் ஆழ்த்தப்பட்டாள். அவளை அவள் பாட்டியின் சமாதியை விட்டுப் பிரிப்பதே எங்களுக்குக் கஷ்டமாகப் போயிற்று. இந்தக் கதையை யெல்லாம் சொல்லி உங்கள் பொழுதைப் போக்குகிறேன்.

ஜ. இல்லை இல்லை! இந்தக் கதையை முற்றிலும் கேட்க மிகவும் ஆவலாயிருக்கிறேன்.

பொ. எங்களால் ஆனமட்டும் சமாதானம் சொல்லிப் பார்த்தோம். இவள் 'என் கதி யென்னவது?—நான் எங்கே போவது? என்னை யார் காப்பாற்றப் போகிறார்கள்!' என்று அழுதுகொண்டே யிருந்தாள். இதைக் கேட்டு நான் என் புருஷனிடம் 'ஐயோ பாவம்! இவள் கதியைக் காண என் மனம் தாளவில்லை. இவள் நம்மைவிட ஏதோ அந்தஸ்தில் வாழ்ந்து வந்தவளாகக் காணப்பட்ட போதிலும் ஒருவேளை நம்முடன் வசிக்க விரும்பினாலும் விரும்பக்கூடும். இவளைத் தனியாக விட்டால் இவள் இப்பாழுலகில் எப்படி வாழப் போகிறாள்.' என்று சொல்ல அவரும், அவளைக் கேட்டுப் பார் என்றார். இதைப் பற்றி சொன்னவுடன் அவள் முகம் வருத்தமெல்லாம் போய் மாறியது! "அம்மா, உங்களுடனே என் வாழ்நாட்களைக் கழிப்பதைத் தவிர நான் வேறொன்றும் கேட்கவில்லை. உங்களுக்கு உதவியாக வேலை செய்ய ஒன்றும் தெரியாமற் போனாலும், சீக்கிரம் கற்றுக்கொண்டு உங்களுக்கு வேலைசெய்து வருகிறேன்" என்றாள். அதற்கு நான் 'உனக்கிஷ்டமான வேலையைச் செய். நாங்கள் உன்னை ஒன்றும் கட்டாயப் படுத்தவில்லை. நீ

உனக்கிஷ்ட மிருக்கும் வரையில் எங்களுடனேயே யிருந்து, நாங்கள் சாப்பிடும் உணவை நீயும் சாப்பிட்டு வாழ்ந்து கொண்டிரு" என்று பதில் கூறினேன். பிறகு அவள் எங்களுடனேயே வாழ்ந்து வந்தாள். சீக்கிரம் நாங்கள் செய்யும் வேலை யெல்லாம் மிகவும் விரைவில் சுறுசுறுப்பாய்க் கற்றுக்கொண்டு எங்களுக்கு மிகவும் ஒத்தாசையா யிருக்கிறாள்; மிகுந்த பொறுமைசாலி, நற்குண முடையவள், எங்கள் மீதும் எங்கள் குழந்தைகளின் மீதும் மிகவும் அன்பா யிருக்கிறாள். ஆகவே நானும் அவளை என் பெண்ணைப் போலவே பாவித்து வருகிறேன். பால்யத்தில் அவள் நல்ல ஸ்திதியில் கொண்டுவரப்பட்டவளா யிருக்க வேண்டும். இவளுக்கு எழுதப்படிக்கத் தெரியும், தையல் வேலையும் செய்கிறாள், எங்களைவிட நன்றாக. வீட்டு வேலை யெல்லாம் முடிந்த பிறகு எங்கள் சின்ன குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாள். இதுதான் எங்கள் கன்னியின் கதை.

ஜ. பொட்டியம்மா! இதையெல்லாம் எனக்குத் தெரிவித்ததற்காக உனக்கு வந்தனம் செய்கிறேன். கன்னியின் நற்குணத்தையும் அறிந்தேன். உன் அருங் குணத்தையும் மெச்சினேன்—உம்—இவள் தகப்பனார் யாராம்? தெரியுமா?

பொ. தெரியும்—என்னமோ சொன்னாளே—ஆம்—பலபத்திரர்!—

ஜ. பலபத்திரர்!—அந்தப் பெயர் கொண்ட ஒருவர் எனக்குத் தெரிந்தவர் இருந்தார்!—இவளுடன் நான் சற்று பேச விரும்புகிறேன்.

பொ! ஆனால் அவளை உள்ளே அழைக்கிறேன்—கன்னி;

ஜ. ஆம்,

க. [உள்ளிருந்து] ஏன் அம்மா! [கன்னி வருகிறாள்.]

ஜ. இங்கே வா அம்மா! அம்மா குழந்தை, உன் விர்த்தாந்தத்தை யெல்லாம் ஆவளுடன் கேட்டேன். நீ தாய் தந்தையர் இல்லாத ஒரு அனாதை யென்றறிந்தேன்.

க. ஆமாம் ஐயா நான் ஒரு—அனாதைப் பெண்.

ஜ. உன் தகப்பனார் பெயர் பலபத்திரரா?

க. ஆமாங்க.

ஜ. உன் தாய் தந்தையர் எங்கே வசித்தார்கள்?

க. பட்டணத்தில் ஐயா, அவர்களிருவரும் நான் சிறு குழந்தையா யிருக்கும் பொழுது இறந்து போனூர்கள். அதன் பேரில்தான் திருவாப்பூரில் என் பாட்டியார் வீடுபோய்ச் சேர்ந்தேன்.

ஜ. அந்தம்மாள் என்ன உன் தகப்பனுரைப் பெற்ற பாட்டியா? நான் இந்தக் கேள்விகளை யெல்லாம் கேட்பதற்காக மன்னிக்க வேண்டும்—நான் ஒரு காரணமாக இவைகளை யெல்லாம் கேட்கிறேன்.

க. ஆமாங்கள், அவர்கள் அனேக வருஷங்களாக விதைவையாயிருந்தார்கள்.

ஜ. அந்தம்மாளுடைய பெயர் என்ன தெரியுமா உனக்கு?

க. பர்வதம்மாள் என்று அவர்கள் பெயர் ஐயா.

ஜ. பர்வதம்மாள்!—இந்த துக்ககரமான கட்டை வண்டி விபத்து நேரிட்டபொழுது நீங்கள் எங்கே போய்க் கொண்டிருந்தீர்கள் ?

க. வானகரத்தின் பக்கத்திலுள்ள அடையாளம் பேட்டுக்கு, அங்கே தான் என் பாட்டியார் பிறந்தார்களாம்.

ஜ. ஓ! அவர்கள் தான்—எல்லா சந்தர்ப்பங்களும் ஒத்திருக்கின்றன. அம்மா கன்னி, நீ அறியாதபடி உனக்கு ஒரு பந்து கிடைக்கப் பெற்ருய்—நான் தான் அந்த பந்து! என்னுடைய தாயாரும் வானகரத்தில் பிறந்தவர்களே. அவர்களுக்கு பர்வதம்மாள் என்று மாற்ருந் தாய் வயிற்று சகோதரி ஒரு அம்மா இருந்தார்கள். நீ பிறந்ததைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; உன் தகப்பனர் இறந்ததும் எனக்கு ஞாபக மிருக்கிறது. அவர் சித்திரம் வரைவதில் மிகவும் கெட்டிக்காரராயிருந்தார். உன் தாயாரும் சீக்கிரத்தில் அத்துயர் ஆற்ருது மடிந்தது எனக்கு ஞாபக மிருக்கிறது. அவர்கள் இறந்தபொழுது எத்தனை குழந்தைகளை விட்டுச் சென்ருர் என்று எனக்

குத் தெரியாது. உன் கதியும் என்ன வாயிற்ரே என்று நான் அறியேன். ஆயினும் இப்பொழுதாவது இப்படி ஆச்சரியகரமாய் உன்னை நான் கண்டு பிடித்தேனே என்று மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீ என்னுடன் வந்து என் வீட்டில் வாழவேண்டும். என் பெண்சாதியும் பெண்களும் இவ்வளவு நற்குணமும் நன்னடத்தையும் உடைய உன்னை சந்தோஷத்துடன் வரவேற்பார்கள்.

க. ஐயா, நீங்கள் என்னிடம் காட்டும் அன்பிற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆயினும் பணக்காரராகிய உங்கள் குடும்பத்தில் ஏழையான நான் எப்படி வாழ்வது?

ஜ. அதெல்லாம் ஒன்றும் கஷ்டமில்லை, ஏழைகளாகிய சுற்றத்தாரை இகழ்ச்சியாக மதிக்கும் குடும்பமல்ல என் குடும்பம். அன்றியும் உனது பேச்சும் நடவடிக்கையும் நீ தகுந்த அந்தஸ்தில் கொண்டு வரப்பட்டிருக்கிருய் என்று தெரிவிக்கின்றன.

க. இறந்துபோன என் பாட்டியார் தன்னுல் கூடியமட்டும் எனக்கு கல்வி கற்பித்தார்கள். அவர்கள் உதாரணத்தைக் கொண்டும், அவர்கள் கற்பித்ததைக் கொண்டும் நான் பலன் அடையாவிட்டால் அது என் குற்றமாகும்.

ஜ, மிகவும் தக்கபடி பேசுகிருய், உன் பேச்சைக் கேட்க உன்மீது பிரீதி எனக்கு அதிகமாய் உண்டாகிறது. சரி, என்னுடன் புறப்பட்டு என் வீட்டுக்குப் போக ஏற்பாடு செய், உனக்கு இவ்வளவு அன்பு பாராட்டிய இவர்களுக்குத் தக்கபடி பிரதி செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

பொ. கன்னியம்மா, உனக்கு வாய்த்த அதிர்ஷ்டத்திற்காக நாங்கள் சந்தோஷப் படுகிரேும், ஆயினும் உன்னை விட்டுப் பிரிய வேண்டுமே யென்றுதான் எங்களுக்கெல்லாம் துக்கமா யிருக்கிறது.

க. என்னைத் தாய் தந்தையர்களைப் போல வளர்த்த உங்களை விட்டுப் பிரிவதென்ருல் எனக்கும் வருத்தமாகத் தானிருக்கிறது. ஒரு ஆதரவுமில்லாத அனுதையாய் நான்

பொழுது என்னை உங்கள் குழந்தைகளில் ஒருத்தியாக பாதுகாத்தீர். உங்களுக்கு நான் என்றும் நன்றியறித லுடையவளா யிருக்க வேண்டும்.

ஞானசுந்தரமும் தம்பியப்பனும் வருகிறார்கள்.

ஞா. ஆஹா! ஜமீன்தார் அவர்கள் வந்திருக்கிறார்களா இங்கு!

ஜ. ஆமப்பா, ஞானம், நான் இன்று இங்கு வந்ததற்கு நல்ல பயன் கிடைத்தது,

ஞா. அது என்ன பயன் ?

ஜ. என்னுடைய பந்துவைக் கண்டு பிடித்தேன், அப்பா, நீங்கள் அன்போடு பாதுகாத்து வந்த இச் சிறு பெண் என் உறவு;

ஞா. யார்?—நம்முடைய கன்னியா?

த. கன்னியா?

ஜ. ஆம், வாஸ்தவத்தில் அவளுக்கும் அவளது பாட்டியா ருக்கும் நீங்கள் செய்த உதவிக் கெல்லாம் உங்களுக்கு வந்தனம் அளித்த பின், நான் இவளை என் மனைவி மக் களுடன் வாழ அழைத்துக் கொண்டு போகலாமென்றி ருக்கிறேன்.

ஞா. இது ஆச்சரியமான சமாசாரமே! சரி கன்னி. நீ பணக் காரர் வீட்டில் போய் வாழ வேண்டி வந்திருக்கிறதே யென்று நாங்கள் மிகவும் சந்தோஷப் படுகிறோம்—உன் நற்குணத்திற்கு அது பொருந்திய தாகும். ஆயினும் நீ இங்கு இனி இருக்க முடியாது என்பதை நினைக்கும் பொழுது எங்களுக்கெல்லாம் வருத்தமாகத்தா னிருக் கிறது.

பொ. அதைத் தான் நானும் சொல்லிக் கொண்டிருந்தேன்.

த. [ஒருபுறமாய் கன்னியிடம்] என்ன!—கன்னி—எங்களை விட் டுப் பிரியவா போகிறாய்?—நாம் இருவரும் பிரிய வேண் டுமோ?

க. [ஒருபுறமாக அவனிடம்] நான் என்ன செய்யக் கூடும்? எனக்கும் வருத்தமாகத்தா னிருக்கிறது!

ஜ. இங்கு விட்டுப் போவதென்றால் எல்லாருக்குமே வருத்த மாக யிருக்கிறாற் போலிருக்கிறதே!

பொ. ஆமாம் ஐயா, அப்படித்தான் நானும் நினைக்கிறேன் நாங்கள் எல்லாம் இங்கு இதுவரையில் சுகமாய்வாழ்ந்து வந்தோம்.

த. [கன்னியிடம்] நான்—உன்னைவிட்டுப் பிரிய வேண்டியது தான்—ஆயினும் கன்னி என்னை நீ மறக்க மாட்டாயே?

க. [அவனிடம் ஒரு புறமாக] என் துக்கத்தை அதிகப் படுத்தாதீர்கள்! [கண்ணைத் துடைத்துக் கொண்டு] உங்களை மறப்பதாவது! ஒருகாலும் மறக்கவே மாட்டேன்.

ஜ. ஓகோ! இவர்கள் இரண்டு பேர்களுக்குள் ஏதோ அன்யோன்யம் இருக்கும் போலிருக்கிறது. அதை வெளிப் படையாகச் சொல்லலாமே பொட்டியம்மா! தாராளமாகச் சொல் நீ தான்.

பொ. ஐயா, எங்களுக்கு கன்னி அம்மாள் உங்கள் பந்து என்பது தெரிவதற்கு இடமில்லை. ஆகவே தம்பியப்பனும் கன்னி அம்மாளும் ஒருவர் மீதொருவர் காதல் கொண்டு மணக்க விரும்பியபோது நாங்கள் அதற்கு ஆட்சேபனை சொல்லவில்லை; கொஞ்சம் பணம் சேர்ந்தவுடன் கொஞ்சம் நிலம் வாங்கி அதைக் கொண்டு அவர்கள் சம்சாரம் செய்ய ஏற்பாடு செய்யலாமென் றிருந்தோம்.

ஞா. அதெல்லாம் இப்பொழுது முடியாது.

த. ஏன் அப்பா?

ஞா. ஜமீன்தாருடைய உறவாகிய பெண்ணை நீ கலியாணம் செய்துகொள்ள நினைக்கலாமா?

ஜ. கன்னி வா! உன் அபிப்பிராயம் என்ன? நீ தான் இவ் விஷயத்தைத் தீர்மானம் செய்ய வேண்டும்.

க. ஐயா! நான் ஒரு அனாதையான ஏழை யென்று எண்ணிய பொழுது, இவர் என்மீது மிகவும் அன்பு பாராட்டினார்; அவர் அப்படிச் செய்தது என் அதிர்ஷ்ட மென்று நானும் எண்ணினேன். அவர் என் காதலைப் பெற்றார்; அதினின்றும் நான் என்ன சந்தர்ப்பங்கள் மாறினபோதிலும் மாறமாட்டேன். அது எப்படியா யிருந்தாலும் அவரைத் தான் மணம்புரிய வேண்டுமென்பது என் தீர்மானம்.

த. கன்னி! நீயே உத்தமி.

ஜ. கன்னி! நன்றாய்ச் சொன்னாய். இப்படிப்பட்ட தைரிய சாலியான பெண் என் பந்துவாயிருப்பது எனக்கு மிகவும் சந்தோஷத்தைத் தருகிறது. நீங்கள் இருவரும் மணக்க என் மனப் பூர்வமாய் உத்திரவளிக்கிறேன். அன்றியும் உனக்குத் தக்க ஸ்ரீதனமும் ஏற்பாடு செய்கிறேன், நீங்களிருவம் சுகமாய் வாழ.

பொ. ஜமீன்தார் அவர்களை ஸ்வாமி ரட்சிப்பாராக!—கன்னியை விட்டுப் பிரிந்தால் என் பிள்ளையின் ஹிருதயம் துயரத்தால் வெடித்துப் போயிருக்குமென நான் அறிவேன். கன்னி! தீர்க்க சுமங்கலியாய் வாழ்வாயாக!

ஜ. என்னிடம் இரண்டு காணி நிலம் தற்காலம் பயிரிடப் படாமலிருக்கிறது; அதை உன் பிள்ளைக்குக் கொடுக்கிறேன். அதைப் பயிரிட வேண்டிய மாடுகள் கலப்பை முதலியவையெல்லாம் நான் கன்னிக்குக் கொடுக்கும் ஸ்ரீதனப் பணத்தைக் கொண்டு வாங்கிக் கொள்ளட்டும்.

த. ஜமீன்தார் அவர்களுக்கு என் நமஸ்காரம்.

ஞா. எங்கள் எல்லோருக்காக நானும் உங்களுக்கு வந்தனம் செய்கிறேன்.

க. ஐயா, இவ்வளவு தூரம் எங்கள் மனதைத் திருப்தி செய்ததால் இன்னொரு விஷயத்திலும் என் வேண்டுகோளுக்கு இணங்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். நான் உங்கள் வீட்டிற்குப் போய் அங்கிருப்பவர்களுக்கெல்லாம் என் மரியாதையைச் செலுத்தி விட்டு இங்கு திரும்பிவர விரும்புகிறேன். இதுவரையில் நான் வாழ்ந்து வந்தபடியே நான் வாழட்டும். இங்கேயே எனக்கறிமுகமானவர்களுடன் என் மாமனார் மாமியாருடன் இவ்வூரிலேயே வாழ விரும்புகிறேன்.

ஜ. கன்னி, நீ கேட்பது மிகவும் நியாயமானதும் பொருத்தமானதுமா யிருப்பதினால் அதை மறுக்க எனக்கு மனம் வரவில்லை. ஆயினும் நீ எங்களவர்களை யெல்லாம் நன்றாய் அறியவேண்டும். அப்படிச் செய்வது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தரும்.

க. ஐயா, உங்கள் வார்த்தைக்கு எப்பொழுதும் இரண்டு சொல்ல மாட்டேன், அப்படியே ஆகட்டும்.

ஜ. ஆனால் தம்பியப்பன் உன்னை எங்கள் வீட்டிற்கு மத்யானம் அழைத்துக்கொண்டு வரட்டும். அங்கு உன் உறவி

னர்களுக் கெல்லாம் உன்னைத் தெரியப்படுத்துகிறேன்—பிறகு எல்லாம் கலந்து பேசுவோம். நான் வருகிறேன். அம்மா, எல்லோரிடமிருந்தும் உத்திரவு பெற்றுக் கொள்கிறேன்.

மற்றவர்கள். நமஸ்காரம்! [ஜமீன்தார்—போகிறார்,]

பொ. கன்னி, உன்னை இனிமேல் நான் மருமகளே என்று கூப்பிடலாமல்லவா? நீ எனக்குண்டாக்கின சந்தோஷத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யக்கூடும்?

த. எனக்குண்டான சந்தோஷத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யக்கூடும்?

க. நீங்கள் எனக்கு செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யக்கூடும்?

ஞா. ஹா! குடை கவிழ்ந்த கட்டை வண்டியைச் சரிப்படுத்த நான் சென்ற பொழுது, அதன் மூலமாக எங்களுக்கெல்லாம் இவ்வளவு நன்மைக்கு அது வழி காட்டும் என்று நான் எள்ளளவும் நினைத்ததில்லை.

பொ. பிறருக்கு நாம் செய்யும் உபகாரம் ஒரு பொழுதும் வீண் போகாதென்கிறார்களே!

க. நீங்கள் எனக்குச் செய்த உபகாரம் வீண் போகவில்லையென்று ரூபிப்பதே என் ஆயுள் பர்யந்தம் என் கடமையாகும், ஸ்வாமியின் கிருபையால்.

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

அருட் பெருஞ்ஜோதி அச்சகம்,
சென்னை-1.